**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 6 ✧ இதழ்-3 ✧ அக்டோபர் 2023

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**



தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.

✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org


# கண்களை விற்று சித்திரம் வாங்கினால் கைகொட்டி சிரியாரோ!

வணக்கம் தோழர்களே!

**மி**ன்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்கிட வேண்டிய அலவன்சு குறித்து பேச்சுவார்த்தை நடத்திட கமிட்டி அமைக்கப்பட்டதை அறிவோம்! அந்த கமிட்டி கூடி பேசி கமிட்டிக்கு புதிய தலைவரை தேர்வு செய்ய பரிந்துரைத்து உத்திரவு வெளியாகியுள்ளது! அலவன்சு பேசி கூடுதலாக பெற வேண்டும் என்கிற எண்ணம் நமக்கு உள்ளது! நிர்வாகத்திற்கு உள்ளதா இல்லையா என்பது பொறுத்திருந்து பார்த்தால் தெரியும்!

போனஸ் பேச்சுவார்த்தை தொடங்கி பேசி முடிவெடுத்து போனஸ் வழங்கிட வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலித்தபடியே உள்ளது! அரசும் வாரியமும் யோசித்து செயல்பட வேண்டும்.

1.12.2023 வருவதற்கு இரண்டு மாதங்களே உள்ளது. அடுத்த ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக்கு கமிட்டி அமைத்திட வேண்டும் என்பதும் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய ஒன்றாக உள்ளது.

16.05.2023 ஒப்பந்தப்படி ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை தவிர்த்திட வாரியத் தலைவரிடம் முறையிட்டுள்ளோம். இவ்விதழ் தங்கள் கரங்களை வந்து சேருமுன்னர் நிலுவைத் தொகை வங்கியில் வரவு வைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கிறோம்.

நிர்வாக அலுவலர் 5 பதவியை பதவி உயர்வில் நிரப்பியுள்ளதும், உதவி நிர்வாக அலுவலர் பதவி உயர்வு அளித்திட காலதாமதமாவதும் கவலையளிக்கிறது. இருப்பினும் நிர்வாக அலுவலர் பதவி உயர்வு அளிக்க அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் உதவி நிர்வாக அலுவலர் பதவி உயர்வுக்கான DPC விரைவில் கூட இருப்பதுமான தகவல்கள் கவலையை குறைக்குமென நம்புவோம்.

வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வு மீதமுள்ளவர்களுக்கு விரைவாக அளித்திடவும் உள்முகத் தேர்வு விரைவாக நடத்திடவும், இளநிலை பொறியாளர் IIம் நிலை, விரைவாக பதவி உயர்வு (Diploma & Non Diploma) அளித்திடவும் மற்றும் இளநிலைபொறியாளர் Iம் நிலை பதவி உயர்வு வழங்கிடவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

BP2 குறித்து அரசின் உத்தரவு தொழிலாளர் மத்தியில் மேலும் சலசலப்பை உருவாக்கும் என்பதை அறிந்துதான் அரசின் செயல்பாடு உள்ளதா என்பது கேள்விக்குறியாகிறது.

31.08.2023ல் வாரியத் தலைவருடன் நடைபெற்றுள்ள பேச்சுவார்த்தை குறிப்புகள் தமிழகம் முழுவதும் தொழிலாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது என்பதும், தொடர்ச்சியாக நாம் நடத்துகின்ற மண்டல செயல்வீரர்கள் கூட்டம் நிர்வாகிகள் மத்தியில் புத்துணர்ச்சியும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பது நிதர்சனமான உண்மை.

இலக்கை நோக்கி பயணிப்போம்! தொழிலும் தொழிலாளர்களும் நமது கண்களாகும்! கண்களை விற்று சித்திரம் வரைந்தால் பயனேது என்பதனை அறிய செய்திட மின்தொழிலை பொதுத்துறையிலே பாதுகாக்க முன் நிற்போம்! ஸ்மார்ட் மீட்டர் புகுத்தலை எதிர்ப்போம்! 'E Tender'ல் களப்பணிக்கு ஆட்களை ஆறு மாத காலத்திற்கு நியமிப்பதை அனுமதியோம்.

TANGEDCO, TANTRANSCO போன்று காற்றுக்கும் சூரிய சக்திக்கும் தனி கம்பெனி, TANGEDCO, உற்பத்தி தவிர்த்து பகிர்மானம் பல கழகம் என்றால் வாரியத்தின் கட்டமைப்பு வனாந்திரத்திற்கு சென்றுவிடாதா? கம்பெனிகள் மேலும் பிரிப்பதனால் கட்டமைப்பு சிதையுமா? கடன் குறையுமா? தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்கும் இரு தூண் கொள்கையை எந்நாளும் கைவிடாத தொழிலாளர்கள் நாம் என்பதை தொடர்ந்து நிரூபிப்போம்! ஒன்றிணைவீர்!

***– ஆசிரியர்***

## களப்பணி காலியிடங்களை பூர்த்தி செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு TNEBEF கடிதம்

பெறுநர்:

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கட்கு வணக்கம்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சுமார் 56,000 பணியிடங்கள் காலியிடங்களாக உள்ளது. 3 கோடிக்கு மேற்பட்டோருக்கான மின்சேவை மிகுந்த மனஉளைச்சலோடு குறைந்த எண்ணிக்கையில் உள்ள தொழிலாளர்கள் தமிழகமெங்கும் செய்து வருகிறார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியம் 12 மண்டலங்களாக செயல்பட்டு வருவதில் சுமார் 46 மின்வட்டங்களில் 2300க்கு மேற்பட்ட பிரிவு அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது. ஒரு பிரிவு அலுவலகத்திற்கு குறைந்தபட்சம் 7 உதவியாளர், 7 கம்பியாளர் இரண்டு மின்பாதை ஆய்வாளர் இரண்டு ஆக்க முகவர்கள்/ சிறப்பு நிலை ஆக்க முகவர்கள் என சுமார் 18 களப்பணியாளர்கள் இருந்தால்தான் அலுவலகத்தையும் மின்நுகர்வோர் பணியையும் இயக்கிட முடியும்.

தற்சமயம் ஒரு பிரிவுக்கு 1 அல்லது 2 கம்பியாளர் கள உதவியாளர் பணியிடத்தில் பிரிவுக்கு 2 அல்லது 3 கேங்மேன் என்று பணி செய்யும் நிலை உள்ளது. மின்பாதை ஆய்வாளர் ஆக்க முகவர் தலா ஒன்று இருப்பதும் இல்லாததும் என்ற நிலை உள்ளது. குறிப்பாக ஒரு பிரிவு ஒன்றும் 18 பணியாளர் இருக்க வேண்டிய இடத்தில் சராசரியாக 8 பணியாளர்கூட இல்லாத நிலை உள்ளது.

சுமார் 50,000த்திற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்ற வேண்டிய மின்பகிர்மான வட்டங்களில் 25,000 வரைதான் உள்ளார்கள். 25,000க்கு மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளது.

கேங்மேன் என்ற பணித்தன்மை கடந்த 6.3.2019ல் 5000 எண்ணிக்கையில் எடுக்க வாரியத்தில் முடிவு செய்யப்பட்டு 7.3.2019ல் பொது அறிவிப்பு செய்யப்பட்டு எழுத்துத் தேர்வு மற்றும் உடல் தகுதித் தேர்வுக்கு சுமார் 90,000க்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டதில் சுமார் 15000 வரை தகுதியானவர்களாக வரையறுக்கப்பட்டு, மின்சார வாரியத்தில் காலியிடம் அதிகமாக இருப்பதால் 5000 என்பதை 10000 தேர்வு பெற்றவர்களில் 9613 பணியாளர்கள் 1.3.2021ல் தமிழக மின்ரா வாரியத்தில் 11 மின்திட்டங்கள் நீங்கலாக (திருநெல்வேலி, சென்னை வடக்கு, சென்னை மையம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, கடலூர், சேலம், மேட்டூர், தருமபுரி, திருப்பத்தூர்) நியமனம் செய்தார்கள். மீதமுள்ள 5387 தேர்வு பெற்றவர்கள் பணி நியமனத்திற்காக காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

மீதமுள்ள கேங்மேன் பணிக்கு தேர்வு பெற்றவர்களை மின்சார வாரியத்தில் நியமனம் செய்திட கோரி சங்க வித்தியாசமில்லாமல் மின்சார வாரியத்தில் உள்ள அனைத்து சங்கங்களுக்கும் மின்சார வாரியத்திடம் கோரிக்கை வைத்துள்ளார்கள். எம்ப்ளாயீஸ் பெடரேஷன் உட்பட ஓரிரு சங்கங்கள் அதற்கான போராட்டங்களும் நடத்தி வருகிறோம்.

குறிப்பாக தொழிற்சங்கத்திற்கு அப்பாற்பட்டு கேங்மேன் தேர்வு பெற்றவர்கள் தன்னிச்சையாக அவர்களுக்குள் குழு அமைத்து தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

வேலை கேட்டு ஆர்ப்பாட்டம், குடும்பத்தினருடன் பச்சிளம் குழந்தைகளுடன் மின்வாரிய வளாகத்தில் இரண்டு நாள் இரவு பகலாக அறப்போராட்டம், தொடர்ச்சியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மின்வாரிய தலைவர் அவர்களையும், தொழிற்சங்க தலைவர்களையும் சந்தித்து மின்சார வாரியத்தில் பணி கேட்டு பேசி வருகின்றனர்.

இந்நிலையில் 20.09.2023 அன்று கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் (மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொகுதி) அலுவலகம் முன்பு திரண்டு வேலை கேட்டு போராட்டம் செய்ததை ஊடகங்கள் மற்றும் செய்தித்தாள்கள் வழியாக அறிந்துள்ளோம்.

மேலும் 21.9.2023 அன்று இரண்டு கேங்மேன் தேர்வு பெற்றவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ள துணிந்து மின்வாரிய அலுவலகம் உள்ள அண்ணாசாலை முன்பு உடல் மீது எரிபொருளை ஊற்றிய நேரத்தில் காவல்துறை தலையிட்டு காப்பாற்றியிருப்பதையும், ஊடகச் செய்திகள் வழியாக அறிகிறோம்.

மின்சார வாரியம் தொடங்கப்பட்ட காலம் முதல் பணியிடங்கள் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பணி வழங்கியதில் வழியாக பல்லாயிரக்கணக்கில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள்.

குறிப்பாக,

03.02.1959ல் 7000 பேர் NMR/TCL

04.01.1973லிருந்து 22.01.1976 வரை 38,000 பேர் NMR/TCL

1991லிருந்து 1997 வரை 13054 பேர் CL

நீதிமன்ற தீர்ப்பின்படி 9095 பேர் CL (Thermal Station)

28.4.1999ல் 2,500 CL

5.8.2005ல் 295 CL

29.10.2005ல் 2500 CL

15.02.2006ல் 73 CL

06.09.2007ல் 21600 CL

05.01.2012ல் 232 CL

25.10.2012ல் 4273 CL

என மேற்கண்ட பட்டியலின்படி மின்சார வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் பெற்று மின்சாரப் பணிகளில் மக்களுக்கு தரமான சேவை செய்து அரசுக்கு நற்பெயரைத் தேடித் தந்து கொண்டிருக்கிறார்கள்.

| | |
|---|---|
| 1987 மற்றும் 1989ல் | 7500 |
| 2009ல் | 4004 |
| 2014ல் | 4000 |
| 2018ல் | 900 |

என சுமார் 17000 ITI கல்வித் தகுதியுள்ளவர்கள் கள உதவியாளராக நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

1987 முதல் ITI கல்வித் தகுதி களஉதவியாளருக்கு இருப்பினும் 10.08.2007ல் 21,600 ஒப்பந்த தொழிலாளர்களை தொழிற்சங்கங்களோடு பேசி முடிவெடுக்கப்பட்டு நிரந்தரம் செய்தது மட்டுமல்ல, தொடர்ச்சியாக விடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் 4500க்கு மேல் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள்.

2007க்கு பிறகு 2021ல் 10,000 கேங்மேன் பணி நியமனத்திற்கு இடையே காலியிடம் முழுமையாக பூர்த்தி செய்யாத நிலையில் 25,000க்கு மேற்பட்ட பணியிடங்கள் தொடர்ந்து வெற்றிடமாக உள்ளது மட்டுமல்ல. பணிச்சுமை கூடுதலாகியுள்ளது, விபத்துகள் அதிகரித்துள்ளது, உயிரிழப்பு எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

இந்த நிலை மாற்றிட மின்சார வாரியத்தில் உள்ள ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்திடவும், ITI படித்தவர்களை களஉதவியாளர்களாக நேரடி நியமனம் செய்திடவும், மீதமுள்ள கேங்மேன் தேர்வு பெற்றவர்களை பணியிலமர்த்திடவும் கோரிக்கை வைத்து பேச்சுவார்த்தை நடத்துவதும், போராடுவதுமாக காலம் சென்று கொண்டிருக்கிறது.

மின்சார வாரியத்தில் சுமார் 1,50,000 விவசாய மின் இணைப்புகள் உட்பட கூடுதலான பணி செய்து வரும் தொழிலாளர்கள் 22.2.2018ல் ஏற்படுத்தப்பட்ட வேலைப்பளு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள பணியை போல் இரண்டு மூன்று மடங்கு கூடுதலாக செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

வேலை கேட்டு போராடி வரும் கேங்மேன் தேர்வு பெற்றவர்கள் 5000த்தில் ஒப்பந்த தொழிலாளர்களாக பணி செய்து தேர்வு பெற்றவர்களும் இருக்கிறார்கள். மின்சார வாரியத்தில் K2 agreement ஒப்பந்தத்தில் பணி செய்து வரும் தொழிலாளர்களும் பணி நிரந்தரம் கோரி வருகிறார்கள். 1998 மற்றும் 2007 ஒப்பந்தத்தில் விடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் குறிப்பாக கேங்மேன் தேர்வெழுத 5ம் வகுப்பு கல்வித் தகுதி மற்றும் 40 வயதுக்கு குறைவாக இல்லாததால் தேர்வில் கலந்து கொள்ள முடியாததும் பணி நிரந்தரத்திற்காக காத்திருக்கும் சூழ்நிலை உள்ளது. தொழிலாளர் நீதிமன்றம் மற்றும் தொழிலாளர் ஆய்வாளர்களிடத்தில் 480 நாட்கள் தொடர்ந்து மின்சார வாரியத்தில் பணி செய்தவர்கள் வேலை நிரந்தரத்திற்காக உத்தரவு பெற்று 1981ம் ஆண்டு தமிழக அரசின் உத்தரவின்படி நிரந்தரம் கோரி வருகிறார்கள்.

ITI கல்வித் தகுதியுடையவர்கள் நேரடி நியமனம் செய்திட 10,000 பணியிடங்களுக்கு அரசுக்கு ஒப்புதலுக்கு சென்றுள்ளதாக கூறப்படுவதும் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் அவசர நிலை கருதி 5387 கேங்மேன் பணியாளர்களும் நியமனம் செய்திட வேண்டும், (தேர்வு பெற்றுள்ளவர்களில் 40 வயதினைக் கடந்திருந்தால் வயது வரம்பை தளர்த்தி நியமனம் செய்திட வேண்டும்)

ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரம் செய்திட பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் (அல்லது) பிரிவில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் PWD Schedule of rate ரூ. 587/- தின ஊதியத்தில் மின்சார வாரியமே ஊதியமளித்து பணி செய்திட வைத்திட வேண்டும்.

ITI படித்தவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்திட ஒப்புதல் அளித்திட வேண்டும்.

இம்மூன்று நிலைகளும் நன்கு ஆராய்ந்து ஒப்புதல் அளித்து பணியமர்த்தப்பட்டால் இன்று இருக்கக் கூடிய காலியிடம் அனைத்தும் பூர்த்தி செய்திட வழிவகுப்பது மட்டுமல்ல தரமான மின் சேவையை மக்களுக்கு செய்து அரசுக்கு நற்பெயரைத் தேடித் தருவதில் தொழிலாளர்கள் முன் நிற்பார்கள்.

சமீபத்தில் மின்சார வாரியம் Mazdoor II Grade என்ற பதவியில் 6 மாத ஒப்பந்த அடிப்படையில் பணியிலமர்த்த சென்னை நகரத்தில் உள்ள மின்வட்டங்களில் உத்திரவிட்டுள்ளது. மின்சார வாரியத்தில் உள்ள காலியிடத்தை இதுபோன்று அவுட்சோர்சிங் செய்ய முயற்சிப்பதை நிறுத்திட அரசு மின்சார வாரியத்திற்கு உத்திரவிட வேண்டும்.

சொந்த மாவட்டத்தை விடுத்து வேறு மாவட்டத்திற்கு பணியமர்த்தப்பட்டுள்ள கேங்மேன்கள் ஊர் மாறுதல் விண்ணப்பித்தும் உத்தரவு வழங்காமல் உள்ளதால் மனஉளைச்சலுடன் பணியாற்றி வரும் சூழ்நிலையில் விபத்துகளும், உயிரிழப்பும் அதிகமாகி வருகிறது என்பதையும் கவனத்தில் கொண்டு கேங்மேன் பணியாளர்களை சொந்த மாவட்டங்களுக்கு ஊர் மாறுதல் அளித்திட வேண்டும்.

மக்கள் நலன் காக்கும் நல்லாட்சியில் மின்சார வாரியத்தில் உள்ள காலியிடங்களை போர்க்கால அடிப்படையில் பூர்த்தி செய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உரிய உத்திரவினை மின்சார வாரியத்திற்கு அளித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

# தஞ்சாவூர் மண்டல செயல்வீரர்கள் கூட்டம் - 1.10.2023

அன்புடையீர் வணக்கம்.

தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் திட்டமிட்டபடி 01.10.2023 ஞாயிறு காலை 10.00 மணியளவில் மயிலாடுதுறை, பேச்சாவடி ராஜ் திருமண மஹாலில் திரு. K. செல்வராஜு மாநில செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திரு. U. கனகராஜ் தஞ்சை மண்டல செயலாளர் வரவேற்புரை வழங்க, தஞ்சை திட்ட செயலாளர் முன்னிலை வகிக்க தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் வட்ட தலைமை நிர்வாகிகள் மற்றும் ஓய்வு பெற்ற தொழிற்சங்க பிரதிநிதிகள் பேசினார்கள்.

அடுத்து பேசிய மாநில உபதலைவர் திரு. C. ராமதாஸ் அவர்கள் மின்சாரத் தொழிலாளர்கள் எதிர்காலத்தை பாதுகாக்க நமது அமைப்பை வலுப்படுத்திட, கடுமையாக பாடுபட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து மாநில தலைவர் திரு. S. மணிகண்டன் அவர்கள் தனது உரையில் உலகளாவிய நிகழ்வுகள் மத்திய அரசின் தொழிற்சங்க விரோதப்போக்கு மற்றும் தமிழக மின்வாரியத்தில் நிலவும் நிர்வாக போக்கு குறித்தும் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் தொழிற்சங்க நடவடிக்கைகள், எடுக்கப்படும் முடிவுகள் அமல்படுத்துவதில் காட்டும் வேகம் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல பொறியாளர்கள், அலுவலர்களுக்கான நீதி கேட்பது போன்ற தன்மைகள் விரிவாக எடுத்து சொன்னதுடன் எதிர்காலத்தில் மின்வாரிய தொழிலாளர்களை பாதுகாக்க நமது அமைப்பை பலப்படுத்த வேண்டியது அவசியம் என எடுத்து கூறினார்.

மண்டல செயல்வீரர்கள் கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்திய நமது மாநில பொதுச் செயலாளர் திரு. A. சேக்கிழார் அவர்கள் தனது உரையில் 16.05.2023 ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்பட நாம் மேற்கொண்ட முயற்சிகள், சந்தித்த போராட்டங்கள் குறித்தும் பேசிய பின் ஒப்பந்தத்தில் இருந்த குறைபாடுகளை சரிசெய்ய மின்வாரியத்தின் கவனத்தை ஈர்த்தும் சரிசெய்யப்படாததால் ஒப்பந்தத்தில் கையெழுத்து போடாமல் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நாம் எடுத்த முடிவு சரிதான் என்பதும் ஊதிய உயர்வு நிலுவை தொகை முதல் தவணை கிடைக்காததிலும் மூன்று மாதத்தில் வேலைப்பளு ஒப்பந்தம் காணப்படும் என்ற உறுதி மொழியும் நிறைவேற்றப்படாததிலும் தெளிவாகி உள்ளன. மேலும் கூடுதலாக மின்வாரியத்தை பிரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ள தகவல் அதிர்ச்சி அளிக்கிறது எனவும் பேசியதை தொடர்ந்து 66 - ஆண்டுகால மின்வாரிய வரலாற்றை தொடர வேண்டிய கட்டாயமும் தமிழக மக்கள் நலன், மின்வாரிய தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரின் நலன் காக்கவும் நாம் விழிப்புடன் செயல்பட வேண்டியதும், எத்தகைய போராட்டத்தையும் சந்தித்து வெற்றிபெற வேண்டியதும் என்ற இலக்கு நோக்கி தஞ்சை மண்டல நிர்வாகிகள் செயல்பட வேண்டியும், மேலும் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி அமைப்பை வலுப்படுத்த வேண்டியதும் இந்த நேரத்தில் முதல் பணி என அனைவரும் சபதம் ஏற்க கேட்டுக்கொண்டார். தமிழ்நாடு மின்வாரியத்தின் அனைத்து மண்டல செயல் வீரர்கள் கூட்டத்தை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி நிர்வாகிகளை, தொழிலாளர்களை தமிழ்நாடு முழுவதும் சந்தித்து அடுத்தகட்ட நகர்வுக்கு நாம் தயாராக வேண்டும் என எழுச்சியுரை நிகழ்த்தினார்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## தீர்மானங்கள்

1. தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01.12.2019 முதல் 6% ஊதிய உயர்வும், 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு கூடுதலாக ஒரு ஆண்டு உயர்வு கிடைக்கவும் உறுதியாக தொடர்ந்து முயற்சித்து ஒப்பந்தம் ஏற்பட சிறப்புடன் பணியாற்றிய நமது பொதுச் செயலாளர் திரு. A. சேக்கிழார் அவர்களையும் உறுதுணையாக இருந்த நமது மாநிலத் தலைவர் மற்றும் அனைத்து மட்ட நிர்வாகிகளையும், உறுதியுடன் போராடிய தொழிலாளர்களையும் தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் தனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.
2. ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் கண்டபடி முதல் தவணை நிலுவைத் தொகையை உடன் வழங்கிடவும், வேலைப்பளு ஒப்பந்தம் மற்றும் அலவன்ஸ்கள் குறித்து சங்கங்களுடன் பேசி நிறைவேற்றவும் மின்வாரிய தலைவர் மற்றும் இயக்குநர் அவர்களை தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.
3. மின்கட்டண உயர்வு ஒருபுறம், மின்விநியோக பகுதிகளில் களப்பணியாளர் காலியிடம் மிக அதிகமாக உள்ளதால் மின்தடையும் மின்விபத்தும் ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டு அரசுக்கு எதிரான மனநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே, ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு தினக்கூலி அடிப்படையிலும் பணிநியமன உத்தரவிற்கு காத்திருக்கும் கேங்மேன் பணியாளர்களையும் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்குமுன் நியமனம் செய்து மக்களை கோபத்திலிருந்து இயல்பு நிலைக்கு கொண்டு வருமாறு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.
4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2021 சட்டமன்ற தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி பழைய பென்ஷன் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், தொழிலாளர் நிரந்தரத்திற்கான உத்தரவு வழங்க வேண்டும் எனவும் தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் தமிழக அரசை வேண்டி கேட்டுக் கொள்கிறது.
5. மத்திய அரசின் நெருக்குதலுக்கு உடன்பட்டு அட்டைபட்டியல் பணியாளர்களை ஆட்குறைப்பு செய்யும் திட்டமான ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டுமென மின்வாரிய தலைவர் அவர்களை கேட்டுக் கொள்வதுடன் அட்டைபட்டியல் பணியாளர்களுக்கு வாங்க வேண்டிய பதவி உயர்வுகளை வழங்கிட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.
6. மின்வாரிய அலுவலகங்களில் துப்புரவு பணி செய்யவும், கழிவறை சுத்தம் செய்யவும் பகுதி நேர பணியாளர்களை நியமிக்காமல் காலம் கடத்துவது என்பது மின்வாரிய மாண்பு சிதைக்கப்படுவதாக தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் எண்ணுகிறது. இந்த நிலையை வாரியத் தலைவர் அவர்கள் பரிசீலித்து பகுதி நேர பணியாளர்களே உடன் பணி அமர்த்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.
7. டெல்டா விவசாயிகள் காவிரி நீர் கிடைக்காமல் இந்த ஆண்டு பல லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி கருகிபோன சூழ்நிலையில், சம்பா சாகுபடியும் செய்ய முடியுமா? என்ற கேள்வி எழுகிறது. மத்திய மாநில அரசுகள் நீலிகண்ணீர் வடிக்காமல் விவசாயத்தை காப்பாற்ற தமிழகத்திற்கு உரிய காவிரி நீரை பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை

வலியறுத்தி அரசியல் சார்பற்ற விவசாய சங்கங்கள் நடத்தும் போராட்டங்களை டெல்டா மாவட்ட மின்சாரத் தொழிலாளர்கள் ஆதரிப்பது என தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் முடிவு செய்கிறது.

௮. மீனவர்கள் சமீப காலமாக இலங்கை கடற்படை மற்றும் கடல் கொள்ளையர்களால் மிரட்டப்படுவதும், உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு கடலில் மீன்பிடிக்க செல்வது பெரும் சவாலாக உள்ளது. இதற்கு கச்சத்தீவை இலங்கை அரசிடமிருந்து மீட்க வேண்டும் என்ற போராட்டம் வலுத்து வருகிறது. மத்திய மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்க கட்சத்தீவை மீட்க அரசியல் சார்பற்ற மீனவர்கள் நடத்தக்கூடிய போராட்டங்களை டெல்டா மாவட்ட மின்வாரிய தொழிலாளர்கள் ஆதரிப்பது என்று தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் முடிவு செய்கிறது.

௯. பணியில் இருக்கும் கேங்மேன் தொழிலாளர்களை களஉதவியாளர் பதவிக்கு மாற்றம் செய்தும், அவர்கள் சொந்த மாவட்டத்திற்கு செல்ல கோரியுள்ள விண்ணப்ப அடிப்படையில் மாறுதல் உத்தரவும், அவர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட மற்ற சலுகைகளையும் பரிசீலித்து உரிய உத்தரவுகளை வழங்கிட வேண்டி மின்வாரிய தலைவர் அவர்களை தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

நாகப்பட்டினம் வட்ட செயலாளர் திரு. K. சாரதி அவர்களின் நன்றியுரையுடன் தஞ்சை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் நிறைவு பெற்றது.

அன்புடன்
**U. கனகராஜ்**
மண்டல செயலாளர் மற்றும் நிர்வாகிகள்
தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர்

## திருச்சி மண்டல செயல்வீரர்கள் கூட்டம் 7.10.2023

*இன்றைய போராட்டம் என்பது உனக்கானது அல்ல*
*உனது சந்ததியருக்கானது.* *- தோழர் சேகுவேரா*

**தொ**ழிற்சங்க வரலாற்றில் புதுமையான புரட்சிகரமான முயற்சி எதிலும் வித்தியாசம் எதிலும் தனித்தன்மை இடைவிடா முயற்சி எந்த பிரச்சனையை கையில் எடுத்தாலும் வெற்றியே இலக்கு.

தொழிலாளர்களை ஒன்றிணைப்பது மின்சார வாரிய அதிகாரிகளுக்காகவும் போராடுவது அனைவரையும் அரவணைப்பது இரவு பகல் பாராமல் தொழிலாளர்களுக்காகவே பாடுபடுவது இத்தகைய பணிகளை செய்வதற்கு ஒரு சிறந்த தலைமையால் தான் முடிவும் தன் உடலை வருத்தி மாநிலம் முழுவதும் மண்டல கூட்டங்களை நடத்துவது என்பது சாதாரண விசயம் அல்ல.

ஒருவராய் இதனைச் செய்ய முடியும் ஒரு சிலரால் தான் அனைத்தையும் செய்ய முடியும்.

தலைப்பே மின்சார வாரியத்தின் இன்றைய நிலை மின்சார வாரிய ஊழியரின் எதிர்காலம் என்பதைப் பற்றி எல்லாம் விளக்கம் அளிக்க தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் கலந்து கொண்டு சிறப்பித்தது எங்கள் திருச்சி மண்டலத்திற்கு கிடைக்க பெருமையாக கருதுகின்றோம்.

உணர்ச்சி மிக்க செயல்படும் தொழிலாளர்களை உணர்வோடு செயல்பட அவர்களின் எண்ண உணர்வுகளை தொழிற்சங்க பணிகளை செய்ய வைத்திட்ட தங்களின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. எங்களுடைய பொதுச்செயலாளர் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தோழர்களுக்கு கிடைத்த பொக்கிசம் ஒரு மகத்தான தலைவரை அடையாளம் கண்டு அவரின் தலைமையின் கீழ்பணி செய்வதையே மிகவும் பெருமையாக கருதுகின்றோம்.

போராட்ட தயங்கும் காலகட்டத்தில் போராடினால் என்ன கிடைக்கும் என்ற ஏளன பேச்சு, நையாண்டித்தனம் நிலை மாறி இன்று நாம் அடையவிருக்கும், அனுபவிக்கும் அனைத்து சலுகைகளும் போராடித்தான் கிடைத்தது. அதைவிட்டுவிடக் கூடாது. ஊதிய உயர்வு அன்றும் தானாக கிடைக்கவில்லை. நம்முடைய பலகட்ட போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்பதை யாரும் மறுக்க முடியாது.

மின்சார வாரியத்தில் காலிப் பணியிடங்களை நிரப்பிட, ஸ்மார்ட் மீட்டரை வைப்பதை தடுத்திட, அவுட்சோர்சிங் முறையை முற்றிலுமாக நிறுத்திட, கேங்மேன் தொழிலாளர்கள் வாழ்க்கையில் நல்லது நடந்திட, 25 ஆண்டுகளாக மின்சார வாரியத்தை நம்பி ஒக்கி புயல், கஜா புயல், தானே புயல் பணி செய்த விடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்திட ஓர் அணியில் ஒன்றிணைவோம், எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மின்சார வாரியத்தையும், ஊழியர்களையும் பாதுகாக்கும் கேடயம் என்பதை மறந்துவிட வேண்டாம் தோழர்களே.

தோழமையுள்ள
**R. சிவசெல்வம்**
மாநில செயலாளர்
**திருச்சி மண்டலம்**

## கரூர் மண்டல செயல் வீரர்கள் கூட்டம் - 8.10.2023

**2023** அக்டோபர் மாதம் 08 ஆம் தேதி (08.10.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று கரூர் ஜவஹர் பஜாரில் உள்ள ரவி மீட்டிங் ஹாலில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் கரூர் மண்டல செயல்வீரர்கள் கூட்டம் கரூர் கிளையின் தலைவர் தோழர். P.V. ராஜலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் அவரது தலைமை உரையில் ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையில் நமது பொதுச்செயலாளர் எடுத்த முன் முயற்ச்சியின் காரணமாக ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை முடிந்ததையும் அதன் பொருட்டு தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கப் பெற்றதையும் குறிப்பிட்டு நமது பொதுச்செயலாளர் அவர்களுக்கு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார். மேலும் நமது பொதுச்செயலாளர் அவர்கள் முழு முயற்சி எடுத்து வேலைப்பளு ஒப்பந்தத்தையும் விரைவில் முடித்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து கரூர் கிளையின் செயலாளர் தோழர் L. முருகவேல் அவர்கள் தனது உரையில் கூட்டுக் குழுவின் சார்பாக சென்னையில் நடைபெற்ற பேரணியில் நமது பொதுச் செயலாளர் அவர்களின் பங்களிப்பு குறித்தும் அதனைத் தொடர்ந்து நாம் தனியாக வாரிய தலைமை அலுவலகத்திற்கு முன்பு நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம் குறித்தும் அதில் நமது பொதுச்செயலாளர் உட்பட தலைவர்களை அழைத்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியது குறித்தும்

மேலும் இனிவரும் காலங்களில் தலைமை முன்னெடுக்கும் போராட்டங்களில் முழு வீச்சில் கலந்து கொண்டு போராட்டத்தை வெற்றி அடைய செய்ய வேண்டுமாறும் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புரையற்றிய நாமக்கல் கிளையின் தலைவர் தோழர் பழனிச்சாமி, நாமக்கல் கிளையின் செயலாளர் தோழர் சசிகுமார், கரூர் மண்டல செயலாளர் தோழர் தண்டபாணி, நாமக்கல் கிளையின் அமைப்புச் செயலாளர் தோழர் சுப்பிரமணி, கரூர் கிளையின் பொருளாளர் தோழர் விஜயகுமார், கரூர் கிளையின் அமைப்புச் செயலாளர் தோழர் வீரமணி ஆகியோர் சிறப்புரையாற்றும்போது ஊதிய உயர்வு நிலுவைத் தொகையினை விரைவில் பெற்று தருமாறும் மின்சார வாரியத்தில் காலியாக உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிடவும் கேங்மேன் பணியாளர்களுக்கு விடுப்பு உள்ளிட்ட சலுகைகளை பெற்று தருமாறும் அவர்களுக்கு கள உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்று தருமாறும் சொந்த மாவட்டங்களுக்கு மாறுதல் உத்தரவு பெற்று தரவும் ஒப்பந்த பணியாளர்களை நிரந்தரம் செய்திடவும் 01.12.2019 முதல் 16.05.2023 வரை பணியில் சேர்ந்தவர்களுக்கு ஊதிய உயர்வினை விரைந்து பெற்றுத் தரவும் வலியுறுத்தி பேசினார்கள்.

அதனைத் தொடர்ந்து மாநில பொருளாளர் தோழர் J.L. பாஸ்டின் ராஜ் அவர்கள் தனது உரையில் நமது பொதுச்செயலாளர் அவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு உறுதுணையாக இருந்து போராட்டங்களை வெற்றி அடையச் செய்து நமக்கான உரிமையை பெற்றிட அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென கேட்டுக் கொண்டார். அவரைத் தொடர்ந்து சிறப்புரை ஆற்றிய மாநில தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் தனது உரையில் மத்திய அரசு மின்சார வாரியத்தை தனியார் மயமாக்கும் முடிவை எதிர்த்தும் மாநில அரசு மற்றும் மின்சார வாரியம் மின்சார வாரியத்தை பல நிறுவனங்களாக பிரிப்பதை எதிர்த்தும் நாம் பல கட்ட போராட்டங்கள் நடத்த வேண்டி இருக்கும் என்றும் அதனால் அனைவரும் எப்பொழுது தலைமை போராட்டத்தை அறிவித்தாலும் அதற்கு உறுதுணையாக இருந்து போராட்டத்தை வெற்றி அடைய செய்து மின்சார வாரியம் தற்போது இருக்கும் நிலையிலே தொடர வேண்டும் எனவும் அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அவரைத் தொடர்ந்து நமது பொதுச் செயலாளர் தோழர். A. சேக்கிழார் அவர்கள் சிறப்பு உரையாற்றும் போது மின்சார வாரியத்தில் இன்றைய சூழ்நிலையில் புதியதாக சலுகைகள் கேட்டு போராட்டம் நடத்தும் சூழ்நிலையை விடுத்து ஏற்கனவே பெற்று வந்த சலுகைகளை தக்க வைக்க போராடும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் எனவும் வரும் காலங்களில் போராடாமல் எந்த சலுகையும் பெறமுடியாத சூழ்நிலையில் உள்ளோம் என்பதையும் மத்திய அரசின் அழுத்தத்திற்கு அடிபணியாமல் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிட மாநில அரசும் மின்சார வாரியமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மின்சார வாரிய பிரிப்பு மற்றும் தனியார் மயமாக்குதலை கைவிட வேண்டும் என்பது பற்றியும் ஏற்கனவே பணியாற்றி வந்த ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரபடுத்திட வாரியமும் அரசும் முன் வர வேண்டும் எனவும் கேங்மேன் பணியாளர்களுக்கு விருப்பமாறுதல் விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் பெறவேண்டிய கோப்பு அரசுக்கு சென்றும் இதுவரை அனுமதிக்கப்படாமல் உள்ளதை சுட்டிக்காட்டியும் ஊதிய உயர்வு நிலுவைத்தொகைகளை இதுவரை வழங்காமல் காலம் தாழ்த்துவது முறையானது அல்ல என்றும் 01.12.2019 முதல் ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படும் வரை பணியில் சேர்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் ஏற்கனவே ஒத்துக்கொண்டபடி விரைந்து ஊதிய உயர்வு வழங்கிட வேண்டிய வலியுறுத்தி பேசினார்.

மேலும் மேற்கண்ட நமது கோரிக்கைகள் மீது தமிழக அரசு மின்சார வாரியமும் மேலும் காலம் தாழ்த்தாது விரைந்து முடித்துக் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கேட்டுக் கொண்டார். கரூர் மண்டல செயல் வீரர்கள் கூட்டத்தின் முடிவில் கரூர் கிராமிய கோட்டத்தின் செயலாளர் தோழர் K. தியாகராஜன் அவர்கள் நன்றி கூறினார். மேலும் கரூர் மண்டல செயல்வீரர்கள் கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. 1) மின்சார வாரியத்தில் காலியாக உள்ள 56000 பணியிடங்களை விரைந்து நிரப்பிட தமிழக அரசும் மின்சார வாரியமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் கேட்டுக் கொள்கிறது. 2) கேங்மேன் பணியாளர்களின் விருப்பமாறுதல் ஊதிய உயர்வு விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் களப்பணியாளர்களாக பதவி உயர்வு வழங்குவது உள்ளிட்ட சலுகைகளை விரைந்து வழங்கிட கேட்டுக் கொள்கிறது. 3) ஒப்பந்த தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் நேரடியாக பணி வழங்கி நிரந்தரப்படுத்த கேட்டுக் கொள்கிறது. 4) ஊதிய உயர்வு நிலுவைத் தொகையின் முதல் தவணையை விரைந்து வழங்கிட கேட்டுக் கொள்கிறது. 5) மத்திய அரசின் அழுத்தத்திற்கு அடிபணியாமல் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறது. 6) மின்வாரிய பிரிப்பு மற்றும் தனியார் மயமாக்குதலை கைவிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறது. 7) மின்வாரிய பணியாளர்களுக்கான அலவன்ஸ் உயர்வு கமிட்டி மற்றும் வேலை குழு கமிட்டிகள் விரைந்து பேச்சுவார்த்தை நடத்திட கேட்டுக்கொள்கிறது. 8) 01.12.2019 முதல் ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படும் வரை பணியில் சேர்ந்த பணியாளர்களுக்கு ஒப்புக்கொண்டபடி விரைந்து ஊதிய உயர்வு வழங்கிட கேட்டுக் கொள்கிறது. கரூர் மண்டல செயல்வீரர்கள் கூட்டத்தின் முடிவுகளை நடைமுறைப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுத்திட வேண்டி தலைமையை கேட்டுக்கொண்டதுடன் மண்டல செயல்வீரர்கள் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

நன்றி!

## கோவை வடக்கு மின்வட்டத்தில் கொடியேற்ற நிகழ்வுகள் - 13.9.2023

**ஆ. கண்ணாதுரை, DEE.,**
மாநில துணைத் தலைவர்/ கோவை

*''ஆக்கம் அதர்வினாய் செல்லும் அசைவிலா*
*ஊக்கம் முடையா னுழை'' - குறள் 594*

உயர்வு, உறுதியான ஊக்கமுடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களிடம் போய்ச் சேரும்.

செயல்திறனால் சிறப்புறுபவர்கள் பெரிதும் போற்றப்படுவர் என்பதை 13.09.2023 அன்று உள்ளங்கை நெல்லிக்கனியாகக் கண்டோம். கோவை வடக்கு வட்டக்கிளையின் நிர்வாகிகள் தலைவர் A. ராஜேந்திரன், செயலாளர் A. முருகவேல், பொருளாளர் R. சிவப்பிரகாஷ், செயல்தலைவர் N. கனகராஜ் அமைப்புச் செயலாளர் M. கருப்புசாமி மற்றும் கோட்ட பிரிவு பிரதிநிதிகள் உள்ளிட்ட கோவை மண்டல நிர்வாகிகள் காலை முதல் மாலை வரை புத்துணர்வுடன் சற்றும் சுணங்காமல், தொழிற்சங்கப் பணியில் ஈடுபடுத்திக் கொண்ட பாங்கு கண்டு மகிழ்ச்சி மேலிட்டது.

ஒவ்வொரு புகைப்படமும் ஒரு கதையைக் கூறும் (Every Photo Tells a Story) என்பர். ஆனால், எல்லா நிகழ்ச்சிகளும் சரித்திரமாவதில்லை. திட்டமிட்டு நடத்தப்படும் நிரந்தர

நிகழ்வுகளே காலத்தால் அழியாமல் இடம் பெற்று சரித்திரமாக திகழ்கிறது. கோவை வடக்கு கிளையில் நடைபெற்ற முப்பெரும் விழா ஓர் சரித்திர நிகழ்வு ஆகும்.

மின்சார வாரியத்தில் உயிரைப் பணயம் வைத்து உழைக்கும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களின் உரிமைகள் மட்டுமல்ல. 66 ஆண்டுகளாக கட்டமைக்கப்பட்டு, நாடெங்கும் நாடி நரம்புகளாயற் பரவிக்கிடக்கும் மின் வழித் தடங்கள், மக்கள் பணத்தில் உருவாக்கப்பட்ட எண்ணிலடங்காத பல இலட்சம் கோடி மின்சார வாரிய சொத்துக்கள், மின்சார வாரியத்தின் மக்கள் சேவையை காக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் நம் தொழிற்சங்கத்திற்கு உண்டு. அதற்காகவே எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பாடுபடும் என்ற நம் தலைவர்களின் கொள்கை வழி நடப்போம்.

மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினார் என்ற நீதிநெறி விளக்கத்தை பொதுச்செயலார் திரு. அ. சேக்கிழார் மற்றும் மாநிலத் தலைவர் திரு. சு. மணிகண்டன் உருவில் அன்று கண்டோம். ஆதவன் கிளம்பும் அதிகாலை வேளையில் அவர்கள் கோவை டாட்டாபாத் சங்க அலுவலகம் வருகை தந்தவுடன், மகளிர் அணியினர், மாநில பொறுப்பாளர்கள், கிளை செயலாளர்கள், கிளைத்தலைவர்கள், கோட்ட பொறுப்பாளர்கள் உள்ளிட்ட கோவை மண்டல பெரும்படை எழுச்சியுடன் வரவேற்றது.

மாநிலத்தலைவர் அவர்கள் நம் அமைப்பை வலுவாக்க ஒவ்வொருவரும் ஒரு உறுப்பினரை சேர்த்து எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு 2019-ம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை ஆண்டாக அறிவித்தார். தொடர்ந்து பொதுச்செயலாளர் அவர்கள் அனைத்து மின்வாரிய அலுவலகங்களிலும் எம்ப்ளாயீஸ் பெடரேசன் கொடி ஏற்றப்பட வேண்டும். தமிழ்நாட்டில் இரட்டை மின் கோபுரக்கொடி இல்லாத மின்சார வாரிய அலுவலகம் இல்லை என்ற நிலையை உருவாக்கிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அதன்படி கோவை மண்டலத்தில் கொடிக்கம்பம் நிறுவும் பணிகள் போட்டி போட்டுக் கொண்டு அமைக்கப்பட்டு கொடியேற்றப்பட்டது.

கடந்த 02.08.2023 அன்று பல்லடம் வட்டக்கிளையில் முத்தூர், வெள்ளக்கோயில், காங்கேயம், பொங்கலூர், நாரணபுரம் ஆகிய ஐந்து துணை மின்நிலையம்/ அலுவலகங்களிலும் கோவை தெற்கு வட்டத்தில் பூமலூர் பிரிவு அலுவலகத்திலும் அன்று மாலை காடம்பாறை முகாமிலும் கொடியேற்றப்பட்டது. பின்னர் அட்டக்கட்டி மின் நகரில் சங்க அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சியையும் மாநில தலைவர், பொதுச்செயலாளர், மாநில பொருளாளர், மாநில அமைப்புச் செயலாளர் கொடி ஏற்றி வைத்து, சிறப்புச் செய்ததையும் நினைவு கூற வேண்டும்.

13.09.2023 அதிகாலை கோவை டாடாபாத் மின்வாரிய வளாக சங்க அலுவலகத்தில் இருந்து பதினெட்டு கார்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களில் கோவை மண்டலத்தில் தொழிற்சங்கத்தை கட்டிக் காக்கும் மாநில பொருளாளர் மற்றும் தெற்கு வட்ட செயலாளர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் வழிகாட்டலில் நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் எழுச்சியுடன் புறப்பட்டு அணிவகுத்து சென்ற காட்சியைக்கண்டு வியக்காதோர் இல்லை. இந்த அணிவகுப்பு எம்ப்ளாயீஸ் பெடரேசனின் உறுதிமிக்க கட்டுக் கோப்புக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியது.

கு.வடமதுரை கோட்டத்தில் சரவணம்பட்டி, சஹாரா, M.G.C. பாளையம் ஆகிய துணை மின்நிலையங்களில் கொடியேற்றம், மரக்கன்று நடுதல், சஹாரா துணைமின் நிலையம் முன்

கல்வெட்டு திறப்பு, மேட்டுப்பாளையம் கோட்டத்தில் கரியாம்பாளையம் பிரிவு அலுவலகம், காரமடை மின்வாரிய வளாகம், மேட்டுப்பாளையம் செயற்பொறியாளர், அலுவலகம் முன் கொடியேற்றம் மற்றும் மேட்டுப்பாளையத்தில் கல்வெட்டு திறப்பு.

சீரநாயக்கன்பாளையம் கோட்டத்தில் தொண்டாமுத்தூர் துணை மின்நிலையம், மாதம்பட்டி பிரிவு அலுவலகம், சீரநாயக்கன்பாளையம் செயற்பொறியாளர் அலுவலகம் கொடியேற்றம் மற்றும் செயற்பொறியாளர் அலுவலகம் முன் கல்வெட்டு திறப்பு ஆகிய 9 இடங்களில் நடைபெற்ற கொடியேற்றம், மூன்று இடங்களில் கல்வெட்டு திறப்பு, மரம் நடுவிழாவை பொதுச்செயலாளர், மாநிலத் தலைவர், மாநில பொருளாளர் மற்றும் மாநில அமைப்புச் செயலாளர், திரு. K. நாராயணமூர்த்தி, மாநில செயலாளர் திரு. R.G. லெனின் சீனிவாசன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இரண்டு இடங்களில் பொதுச்செயலாளரும், மாநிலத் தலைவரும் சிறப்புரையாற்றினர். தற்போதைய வாரிய நிலையையும், தொழிற்சங்க கடமைகளையும், எம்ப்ளாயீஸ் பெடரேசனின் செயல்பாட்டையும் குறித்து பேசிய பொதுச்செயலாளரின் முத்தாய்ப்பான உரையை செயற்பொறியாளர்கள் மற்றும் தோழமை சங்கத்தினர் வந்து கலந்துகொண்டு முழுதும் கேட்டு உள்வாங்கிச் சென்றது கண்டு பெருமை கொண்டோம்.

பைக்காரா மின்திட்டம்/ கோவை என்ற வட்டத்திலிருந்து கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், ஈரோடு, உடுமலை, திருப்பூர், ஊட்டி, பல்லடம் என்று எட்டு வட்டங்கள், இரண்டு மண்டலங்கள் உருவானது. அதில் கோவை வடக்கு வட்டம் ஒரு நாளில் செய்த தொழிற்சங்க பணிகள் வரலாற்றின் பக்கத்தில் முத்திரை பதித்தது பாராட்டுக்குரிய செயல்.

ஏற்றப்பட்டுள்ள எம்ப்ளாயீஸ் பெடரேசன் கொடிகள் 365 நாட்களும், பட்டொளி வீசிப் பறப்பதை கண்காணிக்க வேண்டும். மேதினம் மற்றும் எம்ப்ளாயீஸ் பெடரேசன் தோன்றிய டிசம்பர் 27 அன்று தவறாமல் கொடியேற்றி கொண்டாடுவதை கடமையாக கொள்வோம்.

கோவை வடக்கு வட்டத்தில் பம்பரமாய் சுற்றி பணியாற்றிய கோட்ட தலைவர்கள் S. ராஜீவ், S. தினேஷ்குமார், S. புவனேஸ்வரன், R. மோகன்ராஜ், V. மோகன்தாஸ், கோட்ட செயலாளர்கள் A. கணேசன், M. காமாட்சி முருகன், K. மகேஷ்வரன், K. யோகேஷ்குமார், வட்ட உபதலைவர் A. சரவணகுமார், வட்ட இணைச்செயலாளர் K. திருமூர்த்தி, மகளிரணி செயலாளர் திருமதி. R. யோகசித்ரா, மகளிரணி இணைச்செயலாளர் திருமதி. K. கோமளா மற்றும் குறிப்பாக மாநில இணைச்செயலாளர் P. பிரகாஷ் மற்றும் பங்களிப்பு நல்கிய உறுப்பினர்கள் பணிகள் பாராட்டத்தக்கது.

எம்ப்ளாயீஸ் பெடரேசனை முதன்மை சங்கமாக உருவாக்க ஓயாமல் உழைக்க உறுதி கொள்வோம்.

கொடி பறக்குது; கொடி பறக்குது,
எம்ப்ளாயீஸ் பெடரேசன் கொடி பறக்குது,
மின்சார வாரிய அலுவலகங்களில்,
தமிழ்நாடெங்கும் கொடிபறக்குது,
கொடிபறக்குது; கொடி பறக்குது;
எம்ப்ளாயீஸ் பெடரேசன் கொடி பறக்குது.

வாழ்க எம்ப்ளாயீஸ் பெடரேசன்! வெல்க நம் செயல்கள்!

## தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு சென்னை

நாள் : 06.10.2023

பெறுநர்:

**தலைவர்** மற்றும் **மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா, வணக்கம்.

பொருள் : **நிர்வாகம் - நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத பல்வேறு கோரிக்கைகள் மீது உடனடியாக தீர்வு காண வலியுறுத்தியும், தொழில் அமைதியை நிலைநாட்டிடுவது - தொடர்பாக.**

சமீப காலமாக மின்வாரிய நிர்வாகம், தொழிற்சங்கங்களோடு கலந்து பேசாமல் அவ்வப்பொழுது புதிய உத்தரவுகளை வெளியிட்டு பதவிகள் ஒழிப்பு, அவுட்சோர்சிங், ரீ டிப்ளாய்மெண்ட் போன்ற நடவடிக்கைகளை எடுத்து வருவது. ஏற்கனவே 22.02.2018 அன்று ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு எதிரானது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம். இது தொடர்பாக தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு 05.09.2023 அன்று சிஐடியு சங்கமனையில் கூடி விவாதித்து கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் கீழ்கண்ட கோரிக்கைகள் மீது உடனடியாக தீர்வுக்காண வலியுறுத்துகிறோம்.

1. ஊதிய உயர்வு நிலுவைத்தொகை உடனடியாக வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.
2. மின்பகிர்மான வட்டங்களில் உள்ள ஆரம்பநிலை பணியிடங்களை போர்கால அடிப்படையில் உடனடியாக நிரப்பி மின் விபத்துக்களை தவிர்த்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.
3. மின்வாரியத்தில் உள்ள நிரந்தர தன்மை வாய்ந்த பணிகளை அரசாணையில் 950 நாள் 08.08.1990 அடிப்படையில் விடக்கூடாது என்பதும் அதே போல கடந்த 25.09.2022 அன்று எழுத்துபூர்வமாக அளித்த வாக்குறுதியின்படி Re-Deployment மற்றும் Out sourcing முறைகளுக்கு அனுமதியளிக்க கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம்.
4. 22.02.2018 அன்று ஏற்படுத்தப்பட்ட வேலைப்பளு முத்தரப்பு ஒப்பந்தப்படி புதிய பதவிகளுக்கான அனுமதி, புதிய பிரிவுகளுக்கான அனுமதி, உடனே வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.
5. வேலைப்பளு ஒப்பந்தம் உள்ள பகுதிகளில், அரசாணை 100 அதற்கெதிரான நீதிமன்ற வழக்கு அதில் நிர்வாகம் நீதிமன்றத்தில் கொடுத்த பிரமாண பத்திரம் ஆகியவற்றை கணக்கில் கொள்ளாமல் தொழிற்சங்க தகராறு சட்டத்தின் அடிப்படையில் 9(A) நோட்டீஸ் வழங்காமல் மின் பகிர்மான வட்டங்களில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதற்கு டெண்டர் கோரியது ஒப்பந்த மீறல் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். எனவே, ஸ்மார்ட் மீட்டர் பொருத்த டெண்டர் விடுவதை கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றி தொழில் அமைதியை பாதுகாத்திடவும், தொழில் உறவை மேம்படுத்தவும் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு சென்னை

நாள் : 15.09.2023

பெறுநர்:

**தலைவர்** மற்றும் **மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா, வணக்கம்.

**பொருள் : நிர்வாகம் - மின் பகிர்மான வட்டங்களில் வேலைப்பளு முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிராக 15-க்கும் மேற்பட்ட வட்டங்களில் E- Tender கோரியதற்கு ஆட்சேபனை தெரிவிப்பது - E - Tender கோரியதை ரத்து செய்வது - தொடர்பாக.**

**பார்வை :** ***1. முத்தரப்பு ஒப்பந்த நாள் : 22.02.2018***
***2. அரசாணை எண் 950 நாள்: 08.08.1990***

மின்பகிர்மானத்தில் 15-க்கும் மேற்பட்ட வட்டங்களில் உள்ள ஆரம்ப நிலை பணிகளை செய்வதற்கு மஸ்தூர் நிலை-2 பணியாளர்கள் பிரிவு ஒன்றுக்கு 4 பேர் வீதும் நாள் ஒன்றுக்கு நகர்புறமாக இருந்தால் ரூ. 587.40 என்றும், கிராமப்புற பகுதியாக இருந்தா ரூ. 537/- என்ற வகையில் 6 மாதங்களுக்கு E-Tender கோரப்பட்டுள்ளது. அறிவிக்கை கொடுக்கப்பட்டுள்ள Tender Specification-ல் உள்ள சரத்துக்கள் அனைத்தும் ஏற்கனவே 22.02.2018 ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிரானது என்பதை தெரிவித்துக் கொள்வதோடு நாங்கள் இந்த நடவடிக்கைக்கு ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்கிறோம்.

உபகோட்ட அளவில் பராமரிப்பு பணிகளை அவுட்சோர்சிங் முறையில் மேற்கொள்ள 16.12.2020-ல் வெளியிடப்பட்ட வாரிய ஆணை எண். 82 அதையொட்டி அனைத்து சங்கங்களின் காத்திருப்பு போராட்டம் 21.12.2020 அன்று நடைபெற்றது. தொழிற்சங்கங்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு வாரிய ஆணை எண். 82/16.12.2020-ஐ அப்போதைய மின்துறை அமைச்சரால் ரத்து செய்யப்பட்டதை வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். மேலும் அரசாணை ண். 950 நாள் 08.08.1990 உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தடை செய்யப்பட்ட 19 பகுதிகளில் ஒப்பந்த ஊழியர்களை பயன்படுத்தக் கூடாது என்ற அரசாணைக்கு எதிராக இந்த E-Tender அறிவிப்பு உள்ளது. வேலைப்பளு ஒப்பந்த பகுதிகளில் ஒப்பந்தத்தை மீறி வாரியம் E-Tender விடும் முயற்சியானது வேலை செய்யும் ஊழியர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்பநிலை பணியாளர்களை நிரப்புவதற்கு பதிலாக E-Tender முறையில் நிரந்தர பணிகளை செய்ய முயல்வதை ஒரு போதும் ஏற்க இயலாது.

இது போன்ற நடவடிக்கைகளை செய்வதற்கு முன்பாக வாரியத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள தொழிற்சங்கங்களோடு ஆலோசனைகளை முன்மொழிந்து பேச்சுவார்த்தை நடத்திடும் வழக்கம் பின்பற்றாதது வருத்தமளிக்கிறது.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் 15-க்கும் மேற்பட்ட மின்பகிர்மான வட்டங்களில் கோரப்பட்டுள்ள E-Tender-ஐ உடனே ரத்து செய்திடவும், ஆரம்ப நிலை பணியிடங்களான FA, AE, TA, JA போன்ற பதவிகளை உடனே நிரப்பிட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம்.

## திருநெல்வேலி உற்பத்தி வட்டம் - கோரிக்கைகள் - வாரியத்தின் பதில்

| அனுப்புனர்: | பெறுநர்: |
|---|---|
| **பொறி.த.தாமோதரன்,** பி.இ<br>மேற்பார்வை பொறியாளர்,<br>உற்பத்தி வட்டம்,<br>திருநெல்வேலி - 11 | **திரு. N. முத்தையா,** மாநில உபதலைவர்<br>தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்<br>40/6, EB காலனி, மகாராஜ நகர்,<br>திருநெல்வேலி-11 |

**கடித எண். 006382/578/நிபி-1/உ.2/கோ.கட்டு/2023, நாள்: 29.09.2023**

அய்யா,

**பொருள் : கோரிக்கை மனு - தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் திருநெல்வேலி *29.07.2023* அன்று நடந்த செயற்குழு தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் குறித்தது தகவல் தெரிவித்தல் - சம்பந்தமாக.**

**பார்வை : *தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்/ திருநெல்வேலி அவர்களின் 01.08.2023 நாளிட்ட கோரிக்கை மனு பெறப்பட்ட நாள்: 03.08.2023.***

பார்வையின் படி, தமிழநாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் திருநெல்வேலி உற்பத்தி வட்ட கிளையில் 29.07.2023-ல் நடைபெற்ற திட்ட செயற்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் மீதான நடவடிக்கைகள் குறித்த விபரம் கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்கிறோம்.

1) களப்பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது மற்றும் பணியாளர்களுக்கு விருப்ப ஊர் மாறுதல் உத்திரவு வாங்கப்பட்டுள்ளது.

2) சுருளியாறு மின்நிலைய பகுதி மற்றும் வாரிய குடியிருப்புகளில் காட்டு விலங்குகள் வருவதை கட்டுப்படுத்த வனத்துறையிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

3) i) பாபநாசம் கோட்டத்தை பொருத்தமட்டில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள உதவி செயற்பொறியாளர்/சிவில்/பாபநாசம் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ii) பெரியார் முகாம் பகுதியில் உள்ள சாலைகளை செப்பனிட நகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சாலை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. விரைவில் பணி முடிக்கப்படும்.

iii) கோதையார் கோட்டத்திற்குட்பட்ட முகாம் பகுதியில் உள்ள பழுதடைந்த சாலையினை செப்பனிட இவ்வலுவலகம் வாயிலாக ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட சாலையினை சீரமைக்க தேவையான தளவாடப் பொருட்களை பேச்சிபாறை வனச்சரசக சோதனைச் சாவடி வாயிலாக கொண்டு வருவதற்கு வனச்சரகத்தின் அனுமதி பெற வேண்டி மாவட்ட வன அலுவலர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் பணி ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் மூலம் முகாம் சாலையினை விரைந்து செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.

4) i) பாபநாசம் மற்றும் கோதையார் கோட்டம் சம்பந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள உதவி செயற்பொறியாளர் / சிவில்/ பாபநாசம் மற்றும் கோதையார் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ii) பெரியாறு கோட்டத்தைச் சார்ந்த பழுதடைந்த குடியிருப்புகளை சீர் செய்வதற்கு உரிய மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

5) i) பெரியாறு கோட்டம் வைகை சிறுபுனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ஒப்பந்ததாரால் மட்டுமே முடிவு செய்ய இயலும்.

ii) கோதையார் கோட்டம் பெருஞ்சாணி சிறுபுனல் மின் நிலையத்தில் வாரிய விதிமுறைகளின்படி இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு உரிய ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

6) பணிஓய்வு, விருப்ப ஓய்வு மற்றும் இறந்த அலுவலர் மற்றும் பணியாளர்களக்கு 01.12.2019 அன்று முதல் ஏற்பட்ட ஊதிய உயர்வு உத்தரவின்படி ஓய்வூதியம் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

7) i) பாபநாசம் மற்றும் சேர்வலார் ஆகிய இரண்டு முகாம்களுக்கும் சேர்த்து பொதுவாக பாபநாசம் முகாம் பகுதியில் பாபநாசம் மருத்துவமனையில் ஒரு மருத்துவர் Outsourcing முறையில் பணியமர்த்தப்பட்டு அவர் பாபநாசம் முகாமில் தங்கி பணியாற்றி வருகிறார்.

ii) பெரியாறு முகாம் பகுதியில் தற்போது ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் தேவையின் அடிப்படையில் இரவு நேரங்களில் வெளியில் சென்று மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள வாகன வசதி செய்யப்பட்டுள்ளது.

iii) கோதையார் கோட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரரால் ஒரு செவிலியர் நியமிக்கப்பட்டு பணியாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8) i) பெரியார் முகாம் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை வாரிய விதிமுறைகளின்படியே ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

ii) கோதையார் கோட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வாரிய விதிகளின் படி, முகாம் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

iii) பெரியார் முகம் பகுதிகளில் உள்ள சாலைகளை நகராட்சியிடம் ஒப்படைப்பது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

**மேற்பார்வை பொறியாளர்**
உற்பத்தி வட்டம்/ திருநெல்வேலி

## ஆசிரியர்கள் - போராட்டம் - தமிழக அரசு தலையிட வேண்டி TNEBEF கடிதம்

நாள் : 04.10.2023

பெறுநர்:

**மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

மாண்புமிகு முதல்வர் அவர்கட்கு வணக்கம்.

பொருள் : **போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேசி சுமூக தீர்வு கண்டிட வேண்டுதல் - தொடர்பாக.**

சென்னை நுங்கம்பாக்கம் பள்ளிக் கல்வி இயக்குனர் அலுவலக வளாகத்தில் பணி நிரந்தரம் கோரியும், ஒரே பணி செய்யும் ஆசிரியரிடையே உள்ள ஊதிய முரண்பாட்டை களைந்திடவும், 2013ம் ஆண்டில் நடைபெற்ற தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணி வழங்கிட கோரியும், மேலும் பல கோரிக்கைகளை முன்னிறுத்தி கடந்த 10 நாட்களாக தொடர் உண்ணாவிரதப் போராட்டம் பல்வேறு ஆசிரிய சங்கங்கள் நடத்தி வருகின்றனர்.

இப்போராட்டத்தில் மகளிரும் குழந்தைகளுடன் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளதும் பலர் மயக்கமடைந்து சிகிச்சை பெற்று வருவதும், தொடர்ச்சியாக ஆண், பெண் ஆசிரியர்கள் யாவரும் உண்ணா நோன்பு மேற்கொண்டு வருவதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

எதிர்காலத் தலைமுறையினை உருவாக்கும் ஆசிரியப் பெருமக்களின் உரிமைக்கும், ஊதியத்திற்கும், பணி நிரந்தரத்திற்கும் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை எண்ணி சகோதர தொழிற்சங்கமாக வருந்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு கல்வித்துறைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தியும் முடிவெதுவும் எட்டப்படாமல் உள்ளதும், மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்கிறோம் என கூறப்பட்டுள்ளதும் செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்கள் வழியே அறிய முடிகிறது.

**எனவே, மக்கள் நலன் காப்பதில் முன்னணியில் நிற்கும் தமிழக அரசின் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆசிரியர் சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேசி ஆசிரியர்களின் கோரிக்கை மீது தீர்வு கண்டு போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.**

நன்றி!

தங்களின் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

# பற்சொத்தையின் அறிகுறிகளும் தடுக்கும் முறைகளும்

நன்றி : முதுமை மாத இதழ்

நொறுங்கத் தின்றால் நூறு வயது

**பல் போனால் சொல் போகும்!**



உலக மக்கள் தொகையில் 48 சதவிகித மக்கள் பல் சொத்தையினால் பாதிக்கப்படுகிறார்கள் என்கின்றன ஆய்வுகள். இதற்கு முக்கியக் காரணம். இனிப்புப் பண்டங்களைச் சாப்பிட்டுவிட்டுச் சரியாக வாய் கொப்பளிக்காமல் இருப்பதும், பற்களைச் சரியாகப் பராமரிக்காமல் இருப்பதும்தான்.

பற்களில் ஏற்கனவே உள்ள பாக்டீரியாக்கள் சாப்பிட்ட பிறகு வாயைச் சரியாகக் கொப்பளிக்காமல் அல்லது பல் துலக்காமல் இருந்தால், உணவுத் துகள்கள் மூலம் கலந்து லாக்டிக் அமிலத்தைச் சுரக்கச் செய்துவிடும். இந்த அமிலம் பற்களின் எனாமலை அழிக்கத் தொடங்கும். இதன் தொடர்ச்சியாகப் பற்கள் சொத்தையாகி விடும். பல் சொத்தையைச் சரியாகக் கவனிக்காவிட்டால் பல் வலி வந்து பல்லை எடுக்கக்கூடிய நிலை வரும்.

**பல் சொத்தைக்கான முக்கிய அறிகுறிகள்**

1. பற்களின் இடுக்குகளில் உணவு சிக்கிக் கொள்வது.
2. சூடாக அல்லது குளிர்ச்சியாக உண்ணும்போது பல் கூச்சம் ஏற்படுகிறது.
3. பல்லின் நிறம் கருப்பாக மாறுவது.
4. உணவைக் கடித்து உண்ணும்போது வலி ஏற்படுவது.
5. ஈறு மற்றும் முகத்தில் வீக்கம் வருவது.

**பல் சொத்தையின் நிலைகள்**

ஆரம்பக் கனிம நீக்கம் நிலை உணவுத் துகள்கள் நம் பற்களில் இருக்கும் பாக்டீரியாவுடன் சேர்ந்து அமிலத்தை உருவாக்கும். அமிலங்கள் வெளிப்படும்போது பற்சிப்பி தாதுக்களை இழக்கும். அப்போது பற்களில் மேல் வெள்ளைப் புள்ளிகள் தோன்றலாம். இது பற்சிதைவின் ஆரம்ப நிலை. இதைச் சரிசெய்ய ஃப்ளுரைடு சிகிச்சை உதவும்.

**பற்சிப்பி சிதைவு**

பல்லின் வெள்ளைப் புள்ளி பழுப்பு நிறத்துக்குக் கருமையாக மாறும்போது பற்சிப்பி பலவீனமடைகிறது. இந்த துளைகள் மருத்துவரால் நிரப்பப்படும்.

**டென்டின் சிதைவு**

டென்டின் என்பது பற்சிப்பிக்கு அதாவது அடியில் இருக்கும் திசு. இது பாதிப்படைந்தால் சூடாகவோ, குளிர்ச்சியாக உணவை உட்கொள்ளும்போது பல் கூச்சம் உண்டாகும். அப்போது உடனடியாக மருத்துவரை அணுகிப் பல்லை அடைத்துக்கொள்ள வேண்டும்.

**பல்கூழ் பகுதி சேதமடைவது**

பற்களின் ஆழமான லேயராக உள் அடுக்காக இந்தக் கூழ் இருக்கிறது. பல் கூழ் சேதமடையும் போது அது எரிச்சலடைந்து வீங்கத் தொடங்கும். இதற்கு வேர் சிகிச்சை மட்டுமே பலனளிக்கும்.

**பற்கள் சீழ் பிடிக்கும் நிலை**

பல் சிதைவு கூழ் பகுதி சிதைவிலிருந்து முன்னேறும்போது இது தொற்றாகப் பரவத் தொடங்கிப் பற்களில் சீழ் வரத் தொடங்கும். இந்தத் தொற்று, தாடைகளின் எலும்புகள் மற்றும் தலை, கழுத்துப் பகுதிகளுக்குப் பரவத் தொடங்கும். அப்போது உடனடியாக மருத்துவரை அணுகிச் சிசிக்சை பெற வேண்டும்.

**பற்சொத்தை வராமல் தவிர்ப்பது எப்படி?**

1. நார்ச்சத்து அதிகம் சார்ந்த உணவுகளை எடுத்துக் கொள்ளுங்கள்.
2. சர்க்கரை அதிகம் உள்ள உணவுகளைத் தவிர்க்கவும்.
3. இரண்டு முறை பல் துலக்குவது அவசியம்.
4. நல்லெண்ணெயை வாயில் ஊற்றி 20 நிமிடங்கள் கொப்பளித்து துப்பிய பின், பல் துலக்க வேண்டும்.
5. வருடத்தில் இருமுறை மருத்துவரை அணுகிப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

- மருத்துவர் **ஆர். முரளி கார்த்திக்,** பல் மருத்துவர், சென்னை

## குந்தா நீர்மின் உற்பத்தி வட்டக் கிளை

குந்தா நீர்மின் உற்பத்தி வட்ட கிளையின் சிறப்பு கூட்டம் கடந்த 22.09.2023 அன்று காலை குந்தாவில் கிளை தலைவர் திரு. Y. இரபேல் ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் மாநிலப் பொருளாளர் திரு. J.L. பாஸ்டின் ராஜ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கிளையின் புதிய நிர்வாகிகள் தேர்வை மாநிலப் பொருளாளர் நடத்தி புதிய பொறுப்பாளர்களை அறிமுகப்படுத்தினார். புதிய நிர்வாகிகளை வாழ்த்தி திரு. A. கண்ணாதுரை, மாநில உபதலைவர், திரு. G. காமராஜ், பொருளாளர், கோவை மாநகர் கிளை மற்றும் திரு. A. ராஜன் Er. ATO (ஓய்வு) ஆகியோர் உரையாற்றினர்.

**தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள்**

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | : | திரு. **Y. இரபேல் ஜோசப்,** கணக்கு உதவியாளர் (ஓய்வு) | - 94423 67914 |
| செயலாளர் | : | திரு. **R. ரைய்சன்டேவிட்குமார்,** கணக்கு உதவியாளர் | - 63848 72092 |
| பொருளாளர் | : | திரு. **N. ராஜேந்திரன்,** சிறப்பு நிலை முகவர்/PH-1 | - 75986 84710 |
| செயல் தலைவர் | : | திரு. **K. வாசுதேவன்,** சிறப்பு நிலை முகவர்/சிங்காரா | - 75985 24142 |
| அமைப்பு செயலாளர் | : | திரு. **S. சசிக்குமார்,** டைம் கீப்பர்/PUSHAP | - 89036 35998 |

| | | | | |
|---|---|---|---|---|
| மகளிர் அணி செயலாளர் | : | திருமதி. **G. சரஸ்வதி,** கணக்கு மேற்பார்வையாளர் | - | |
| உப தலைவர் | : | 1. திரு. **P.T. ஆண்டனி ஜஸ்டின்,** கணக்கு மேற்பார்வையாளர் | - | 94420 84503 |
| | | 2. திரு. **செல்வராஜன்,** முகவர் முதல் நிலை/ PH-4 | - | 94873 60724 |
| இணை செயலாளர் | : | 1. திரு. **K. மணி,** ஓட்டுநர்/எமரால்டு | - | 98415 64475 |
| | | 2. திரு. **P. செல்வராஜ்,** முகவர் முதல் நிலை/ PH-5 | - | 94420 82883 |
| | | 3. திரு. **A. பிரகாஷ்பாபு,** கணக்கு உதவியாளர் | - | 94863 84162 |
| | | 4. திரு. **D. விஜய் ஆனந்த்,** உதவி மின்பொறியாளர்/ PH-1 | - | 75984 09800 |

## கோட்ட நிர்வாகிகள்

**பவர் ஹவுஸ்-I**

| | | | | |
|---|---|---|---|---|
| தலைவர் | : | திரு. **V. ராமமூர்த்தி,** முகவர் முதல் நிலை | - | 94427 52758 |
| செயலாளர் | : | திரு. **S. ரமேஷ்,** டூல் கீப்பர்/PH-V | - | 89037 76641 |
| உதவி செயலாளர் | : | திரு. **C. கோபால்,** மெக்கானிக் II-ம் நிலை | - | 94873 78981 |
| | | திரு. **D. லட்சுமணன்,** டைம் கீப்பர்/ எமரால்டு | - | 97860 31543 |
| | | திரு. **P. ஞானசீலன்,** மெக்கானிக் II-ம் நிலை | - | 80983 88060 |
| | | திரு. **A.N. பீட்டர்,** மின்பாதை ஆய்வாளர் | - | 94431 06231 |

**பவர் ஹவுஸ்-II**

| | | | | |
|---|---|---|---|---|
| தலைவர் | : | திரு. **S. உமாசங்கர்,** முதுநிலை ஓட்டுநர் | - | 94435 85413 |
| செயலாளர் | : | திரு. **N. நரேஷ்குமார்,** எலக்ட்ரிசியல் 1ம் நிலை | - | 94426 09005 |

**பவர் ஹவுஸ்-III & IV**

| | | | | |
|---|---|---|---|---|
| தலைவர் | : | திரு. **R. நடராசன்,** முதுநிலை ஓட்டுநர் | - | 96594 92556 |
| செயலாளர் | : | திரு. **P. வேலுச்சாமி,** மின்பாதை ஆய்வாளர் | - | 94873 00945 |

**சிங்காரா**

| | | | | |
|---|---|---|---|---|
| தலைவர் | : | திரு. **B. பட்டேயில் ரஞ்சித்,** முகவர் I-ம் நிலை | - | 94862 59843 |
| செயலாளர் | : | திரு. **S. சிவக்குமார்,** கனரக வாகன ஓட்டுநர் | - | 94435 22416 |
| உதவி செயலாளர் | : | திரு. **B. யூசுப்,** மெக்கானிக் I-ம் நிலை | - | 94427 90860 |

**மோயார்**

| | | | | |
|---|---|---|---|---|
| தலைவர் | : | திரு. **H.G. திருமலை,** சிறப்பு நிலை ஓட்டுநர் | - | 94870 70291 |
| செயலாளர் | : | திரு. **J. லாசர் செல்வராஜ்,** மின்பாதை ஆய்வாளர் | - | 95858 30625 |
| உதவி செயலாளர் | : | திரு. **S. கோவிந்தன்,** மின்பாதை ஆய்வாளர் | - | 94420 82764 |

**Pushep**

| | | | | |
|---|---|---|---|---|
| தலைவர் | : | திரு. **C. சிவக்குமார்,** கனரக வாகன ஓட்டுநர் | - | 94861 19997 |
| செயலாளர் | : | திரு. **M. சுப்ரமணியன்,** டைம் கீப்பர் I-ம் நிலை | - | 94447 10710 |
| உதவி செயலாளர் | : | திரு. **G. ராஜசேகரன்,** முகவர் முதல் நிலை | - | 96265 67247 |

# தேனி TNEBEF தொழிற்சங்க கட்டிட திறப்பு விழா

தேனி தொழிற்சங்க கட்டிட திறப்பு விழா மற்றும் கல்வெட்டு, கொடியேற்று விழாவிற்காக 24.09.2023 அன்று மாலை 9 மணியளவில் முன்கூட்டியே பொதுச்செயலாளர், பொருளாளர், செயல்தலைவர், அமைப்புச் செயலாளர் மற்றும் மாநில மகளிரணி செயலாளர் ஆகியோர்கள் வருகை புரிந்தமைக்காக தேனி வட்டக்கிளை நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றது.

25.09.2023 அன்று காலை 9.00 மணியளவில் அன்னலட்சுமி ஹோட்டலில் இருந்து தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், செயல் தலைவர், அமைப்புச் செயலாளர், மாநில மகளிரணி செயலாளர் திருமதி. M. பாரதி, மாநில உபதலைவர் திருவாளர்கள் N. முத்தையா, A. கண்ணாத்துரை, K. சிவசுப்புபாண்டியன் மற்றும் சேலம் வட்டக்கிளைச் செயலாளர் திரு. R. சேகர், விருதுநகர் வட்ட செயலாளர் திரு. K. ஞானகுரு மற்றும் ஓய்வு பெற்ற அசோசியேசன் பொதுச்செயலாளர் திரு. சுடலை ஆகியோர்களை தேனி திட்டத் தலைவர் M. மகாலிங்கம் அவர்கள், தேனி வாணி சுவீட்ஸ் அருகில் வரவேற்றார். பின்பு அங்கிருந்து மேளதாளத்துடன் திரு. முத்துப்பாண்டி தலைமையிலும் மற்றும் விண்ணைப் பிளக்கும் சிவகாசி வெடிச்சத்தத்துடன் திரு. செந்தில் தலைமையில் அழைத்து ஊர்வலமாக வந்தனர்.

மேலும் மேற்பார்வை பொறியாளர்/ தேனி அலுவலகம் முன்பாக அமைக்கப்பட்ட நமது இரட்டை கோபுரம் கொண்ட செங்கொடியினை மாநில பொதுச்செயலாளர் திரு. அ. சேக்கிழார் அவர்கள் ஏற்றி வைத்தார். கல்வெட்டினை மாநில தலைவர் திரு. S. மணிகண்டன் அவர்கள் திறந்து வைத்தார். அப்போது தேனி தொழிற்சங்க சட்ட ஆலோசகர் A. அய்யாத்துரை மற்றும் பலர் கலந்து கொண்டு கொடியேற்று விழா மற்றும் கல்வெட்டு திறப்பு விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. முதன் முதலில் பொதுச் செயலாளர் தமது பொற்கரங்களால் கல்வெட்டு அறிவிப்பு பலகையில் ''மாற்றம் என்னும் வார்த்தையை தவிர அனைத்தும் மாறத்தக்கது'' என்னும் முத்திரை எழுத்துக்களைப் பதித்தார்.

மேலும் மேற்பார்வை பொறியாளர்/ தேனி அலுவலகம் முன்பாக மதுரை மகளிரணி குழு தலைவர் கலைச்செல்வி, சாந்தி கலாமேரி, லதா, தனம், திலகவதி ஆகியோர்களுடன் தேனி திட்ட மகளிரணி செயலாளர் திருமதி. B. ரதி மகளிரணி இணைச் செயலாளர் திருமதி. R. புனிதா ஆகியோர்களால் மாநில பொறுப்பாளர்களுக்கு பூரண கும்ப மரியாதை கொடுக்கப்பட்டு அலுவலக வளாகத்திற்குள் கட்டப்பட்டுள்ள எழுப்ப புதிய TNEBEF தொழிற்சங்க கட்டிடத்திற்கு அழைத்து வரப்பட்டனர். பொதுச்செயலாளர் அவர்கள் ரிப்பன் வெட்டி புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார் மற்றும் பொதுச்செயலாளர், தலைவர், செயல் தலைவர், திருமதி. M. பாரதி மற்றும் தேனி திட்ட செயலாளர் R. மூக்கையா ஆகியோர்களால் ஐந்து முக குத்துவிளக்கு ஏற்றப்பட்டு அதன்பின் அலங்கரிக்கப்பட்ட மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அதன்பின்பு அனைவருக்கும் தேனி திட்ட உபதலைவர் C. ராமர் அவர்கள் இனிப்பு வழங்கினார்.

தேனி திட்ட தலைவர் M. மகாலிங்கம் அவர்கள் தலைமையிலும் மற்றும் வரவேற்புரை ஆற்றினார். முதலில் தேனி திட்ட பொருப்பாளர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. சேலம், கோவை, திருநெல்வேலி, மதுரை, விருதுநகர் ஆகிய மின்வட்டங்களிலிருந்து வருகை புரிந்த அனைவருக்கும் மற்றும் மதுரை மெட்ரோ, GCC, சிவகங்கை, இராமநாதபுரம் மின்திட்டத்திலிருந்து வருகை புரிந்த அனைவருக்கும் சால்வைல அணிவிக்கப்பட்டது. அனைவரும் சிறப்புரை ஆற்றி சிறப்பு சேர்த்தனர்.

மாநில தலைவர் திரு. S. மணிகண்டன், பொருளாளர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் செயல் தலைவர் R. ஜெயராமன் அமைப்புச் செயலாளர் திரு. நாராயணமூர்த்தி, ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலக

சங்க பொதுச்செயலாளர் திரு. P. சுடலை, மாநில மகளிரணி செயலாளர் திருமதி. M. பாரதி ஆகியோர்கள் சிறப்புரை ஆற்றிய பின் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

மேற்பார்வை பொறியாளர் / தேனி செயற்பொறியாளர்கள் பொது/பகிர்மானம்/ இயக்குதல் தேனி மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் நகர் தேனி மற்றும் கம்பம் மற்றும் உதவி மின்பொறியாளர்கள் நகர் தேனி, வீரபாண்டி, வடக்கு கம்பம், கூடலூர், சுருளிப்பட்டி, K.K. பட்டி, பிரிவுகள் மற்றும் மற்ற பின் பொறியாளர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

திரு. E. காமராஜன், திட்ட பொருளாளர் அவர்கள் விழாவினையும் நமது தொழிற்சங்க செயல்பாட்டினையும் விரிவாக எடுத்துரைத்தார்.

1. அதன்பின்பு பொதுச்செயலாளர் செய்தியாளர்களின் கூறுகையில் மின்சார வாரியத்தில் 56 ஆயிரம் காலிப்பணியிடங்களில் நிரப்ப வேண்டும்.
2. ஒப்பந்த தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம் ரூ. 587/- மின்சார வாரியம் நேரடியாக வழங்க வேண்டும்.
3. கேங்மேன் தேர்வில் மீதமுள்ள 5366 பேருக்கு பணி நியமனம் உத்தரவு வழங்க வேண்நடும்.
4. ஊதிய உயர்வு நிலுவைத்தொகை முதல் நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.
5. அனைத்து பிரிவுகளிலும் காலியாக உள்ள பகுதி நேரப் பணியாளருக்கு முழு ரே பணியாளர்களாக நியமனம் செய்ய வேண்டும்.
6. புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய பென்சன் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.
7. அனைத்து பிரிவினருக்கும் தாமதம் இன்றி பதவி உயர்வு வழங்க வேண்டும்.
8. 'DC' முறையான மாதம் ஒருமுறை செயல்படுத்த வேண்டும்.
9. பல்வேறு வட்டங்களில் பணி செய்து வரும் கேங்மேன் பணியாளர்கள் அவர்களது சொந்த ஊருக்கு மாறுதல் செய்து வாரியம் உத்தரவுவிட வேண்டும்.
10. R. நிஷாந்த்குமார் கேங்மேன் காமயகவுண்டன்பட்டி அவர்கள் மீது வாரிய நிலையாணைகளுக்கு மாறாக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை ரத்து செய்து அன்னாரின் பயிற்சி காலத்தினை வரைமுறைப்படுத்த வேண்டும்.
11. ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தினை கேரளா அரசு மாநில சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றியதுபோல் தமிழக அரசும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தினை ரத்து செய்ய சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என தெரிவித்தார்.

நன்றி உரையாக திட்டச்செயலாளர் அவர்கள் முப்பெரும் விழாவிற்காக வருகை தந்து கெபளரவித்த மாநில பொறுப்பாளர்கள் மற்றும் சேலம், கோவை, விருதுநகர், திருநெல்வேலி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை GCC, மதுரை மெட்ரோ மற்றும் மதுரை மகளிரணி பொறுப்பாளர்களையும் தேனி திட்ட பொறுப்பாளர்கள், கோட்ட வட்ட பொறுப்பாளர்கள், தொழிலாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் அனைவருக்கும் நன்றியினை கூறி விழாவினை நிறைவு செய்தார்.

**R. மூக்கையா**
செயலாளர் TNEBEF
தேனி

## நான்மணிக்கடிகை பாடல். 16 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### வளப்பாத்தி யுள்வளரும் வண்மை!

**வளப்பாத்தி யுள்வளரும் வண்மை; கிளைக்குழாம்**
**இன்சொற் குழியுள் இனிதெழூஉம்; வன்சொல்**
**கரவெழூஉம் கண்ணில் குழியுள்; இரவெழூஉம்**
**இன்மைக் குழியுள் விரைந்து.**

**கருத்துரை**

''ஈகை'' என்னும் போற்றத்தக்க பயிரானது செல்வம் என்னும் பாத்தியுள் தான் செழித்து வளரும்! நம்மைச் சார்ந்த உறவினர்கள் என்னும் பயிர் நாம் உதிர்க்கும் இன்சொல் என்னும் பாத்தியில்தான் வளமாக வளரும்!

வன்சொல்லோடு கூடிய வஞ்சனை என்னும் பயிர், கண்ணோட்டம் (அருள்) இன்மை என்னும் பாத்தியுள் தான் வேர்விட்டுப் பெருகி வளரும்! அதுபோல், ''இரத்தல்'' என்னும் பயிர் ''வறுமை'' குடிகொண்டிருக்கும் பாத்தியுள் தான் விரைவாக வளரும்!

**அருஞ்சொற்பொருள்:**

வண்மை = ''ஈகை'' என்னும் பயிர்; வளப்பாத்தியுள் வளரும் = செல்வம் என்னும் பாத்தியுள் விளையும்; கிளைக் குழாம் = உறவினர் கூட்டம்; இன்சொல் குழியுள் = இன்சொல் எனும் பாத்தியுள்; எழூஉம் = செழுமையாய் வளரும்; வன்சொல் கரவு = வன்சொல்லோடு கூடிய வஞ்சனை என்னும் பயிர்; கண் இல் குழியுள் = கண்ணோட்டம் இன்மை என்னும் பாத்தியுள்; எழூஉம் = வளரும்; 'இரவு' = இரத்தல் என்னும் பயிர்; இன்மைக் குழியுள் = ''வறுமை''யாகிய பாத்தியுள்; விரைந்து எழூஉம் = உடனே வளரும்.

**கருத்துச் சுருக்கம்:**

ஈகை, செல்வத்தால் உண்டாகும்; உறவினர்க்கு மகிழ்ச்சி, இன்சொல்லால் உண்டாகும்; வன்சொல்லோடு கூடிய வஞ்சனை உணர்வு அருள் இன்மையால் உண்டாகும்; இரத்தல் வறுமையால் உண்டாகும்!

### சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**: 9841446621 : 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*



# அத்தியாயம் - 16

## மனித உடலைப் பாதிக்கின்ற குற்றங்கள்

வழக்கறிஞர் **தேவிபாலா குணசேகரன், M.A., M.L.,**

**பிரிவு 366 (Section 366)**

**குற்றம் :** ஒரு பெண்ணைத் திருமணத்திற்குக் கட்டாயப்படுத்துதல் அல்லது அவளைக் கெடுத்தல் போன்றவற்றிற்காக பிடித்துச் செல்லுதல் அல்லது கடத்திச் செல்லுதல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 366 A (Section 366 A)**

**குற்றம் :** வயது வராத பெண்ணைச் சட்ட விரோதமான உடலுறவுக்காகக் கொணர்தல்.

**தண்டனை :**10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 366 B (Section 366 B)**

**குற்றம் :** அயல் நாட்டில் இருந்து பெண்ணைச் சட்ட விரோதமான உடலுறவுக்காகக் கொணர்தல்.

**தண்டனை :**10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 367 (Section 367)**

**குற்றம் :** கொடுங்காயம், அடிமைநிலை போன்றவற்றிற்கு ஒருவரை உட்படுத்த வேண்டிப் பிடித்துச் செல்லுதல் அல்லது கடத்திச் செல்லுதல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 368 (Section 368)**

**குற்றம் :** பிடித்து அல்லது கடத்திச் செல்லப்பட்ட ஒருவரை மறைத்து வைத்தல் அல்லது அடைத்து வைத்திருத்தல்.

**தண்டனை :**ஆளைப் பிடித்தல் அல்லது கடத்திச் செல்வதற்கு நிகரான தண்டனை.

**பிரிவு 369 (Section 369)**

**குற்றம் :** ஒரு குழந்தையை அதனிடமுள்ள பொருளை அபகரிக்கும் உட்கருத்துடன் பிடித்துச் செல்லுதல் அல்லது கடத்திச் செல்லுதல்.

**தண்டனை :** 7 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 370 (Section 370)**

**குற்றம் :** எவரையேனும் அடிமையாக்க வாங்குதல் அல்லது விற்றல்.

**தண்டனை :** 7 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 371 (Section 371)**

**குற்றம் :** வாடிக்கையாகவே அடிமைகளை வைத்து வியாபாரம் செய்தல்.

**தண்டனை :** ஆயுள் சிறைவாசம் அல்லது 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 372 (Section 372)**

**குற்றம் :** விபச்சாரம் போன்ற செயல்பாடுகளின் பொருட்டு வயது வராத ஒருவரை விற்பனை செய்தல் அல்லது வாடகைக்கு விடுதல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 373 (Section 373)**

**குற்றம் :** விபச்சாரம் போன்ற செயல்பாடுகளின் பொருட்டு வயது வராத ஒருவரை விலைக்கு வாங்குதல் அல்லது அவரைத் தன் கைவசமாக்குதல்.

**தண்டனை :** 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 374 (Section 374)**

**குற்றம் :** சட்டவிரோதமான கட்டாய உழைப்பிற்கு உட்படுத்துதல்.

**தண்டனை :** 1 ஒரு ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 375 ( Section 375)**

**வன்முறைப் புணர்ச்சி - Rape**
**விளக்கம்**

விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள முறையிலன்றி கீழ்வரும் ஆறு வகையான உடலுறவுகளில் எதனை ஒரு ஆண் மேற்கொண்டாலும், அந்த ஆண் வன்முறைப் புணர்ச்சிக் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுவார்.

முதலாவது ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு விரோதமாக, இரண்டாவது அவளுடைய சம்மதமின்றி, மூன்றாவது அவளுக்கு அல்லது அவளுக்கு நெருக்கமானவர்களுக்கு மரணம் அல்லது காயம் விளைவிக்கப்படும் என்று அச்சுறுத்திச் சம்மதம் பெற்று, நான்காவது தாம் அப்பெண்ணின் கணவர் அல்லர் என்பதையும், அப்பெண் சட்டப்பூர்வமாகத் திருமணம் செய்து கொண்டிருக்கிற அல்லது அவ்வாறு திருமணம் செய்து கொண்டிருப்பதாக நம்புகிற வேறொரு ஆடவர் என்றே தம்மை அப்பெண் நம்புகிற காரணத்தால் அப்பெண்ணின் சம்மதம் கொடுக்கப்படுகிறது என்பதையும் ஆண் அறிந்தும் அப்பெண்ணின் சம்மதத்துடன் உடலுறவு கொள்வது ஐந்தாவதாக அவளுடைய சம்மதத்துடனேயே உடலுறவு நடந்திருந்தாலும், அச்சம்பவத்தின் போது அந்தப் பெண் சித்த சுவாதீனமற்று இருந்தால் அல்லது அந்த ஆணால் அல்லது அவருக்கு அடங்கிய மற்றொருவரால்

போதையூட்டக்கூடிய அல்லது மயக்கம் உண்டாக்கக்கூடிய ஒரு பொருள் அந்தப் பெண்ணிற்குக் கொடுக்கப்பட்டிருந்ததன் விளைவாக, அந்தப் பெண் தான் எப்படிப்பட்ட சூழ்நிலையில் எதற்குச் சம்மதிக்கிறோம் என்பது குறித்தும், அதன் பின் விளைவுகள் குறித்தும் அறிந்திராத நிலையில் கொடுத்த சம்மதத்தின் பேரில் செய்யப்பட்ட உடலுறவு ஆறாவது பதினெட்டு வயது நிறைவடையாத போது அவள் சம்மதத்தைப் பெற்றோ, பெறாமலோ மேற்கொள்ளப்படும் உடலுறவு ஆகிய அனைத்துமே வன்முறைப் புணர்ச்சி அல்லது வன்புணர்வு ஆகும்.

**விதிவிலக்கு**

18 வயது பூர்த்தியடைந்த தன் மனைவியுடனான கணவனின் உடலுறவு வன்புணர்வு ஆகாது.

**பிரிவு 376 (Section 376)**

**குற்றம் : வன்புணர்ச்சி**

**தண்டனை :**ஆயுள் சிறை தண்டனை அல்லது 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**குற்றம் :** பனிரெண்டு வயதுக்கு உட்பட்டிராத தனது மனைவியை வன்புணர்வு செய்தல்.

**தண்டனை :**2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

**பிரிவு 376 A (Section 376 A)**

**குற்றம் :** பிரிந்திருக்கையில் நபர் ஒருவர் தனது மனைவியுடன் வன்புணர்வில் ஈடுபடல்.

**தண்டனை :** 2 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 376 B (Section 376 B)**

**குற்றம் :** தனது பாதுகாப்பிலிருக்கும் பெண்ணை பொது ஊழியர் ஒருவர் வன்புணர்வு செய்தல்.

**தண்டனை :** 5 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 376 C (Section 376 C)**

**குற்றம் :** சிறைச்சாலை கைதிகளின் காப்பகம் போன்றவற்றில் கண்காணிப்பாளரால் வன்புணர்வு நிகழ்த்தப்படுதல்.

**தண்டனை :**5 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**பிரிவு 376 D (Section 376 D)**

**குற்றம் :**மருத்துவமனையிலுள்ள பெண் எவருடனும் மருத்துவமனையின் மேலாளரோ பிறரோ வன்புணர்வில் ஈடுபடுதல்.

**தண்டனை :** 5 ஆண்டுகள் சிறைவாசமும் அபராதமும்.

**பிரிவு 377 (Section 377)**

**குற்றம் :** இயற்கைக்கு மாறான குற்றங்கள்.

**தண்டனை :** ஆயுள் சிறைவாசம் அல்லது 10 ஆண்டுகள் சிறைவாசமும் அபராதமும்.

# தொழிலாளர்களுக்கு அலவன்ஸ் கூடுதலாக அளிப்பதற்கு முடிவெடுக்க வாரியத்தால் அமைக்கப்பட்ட குழுவை மாற்றியமைத்த உத்தரவு

**(ABSTRACT)**

TANGEDCO - Allowances - Review of Allowances allowed to the Employee of TANGEDCO and TANTRANSCO - Reconstitution of Committee - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per.) CMD TANGEDCO Proceedings No. 158,** **Dated 22nd September 2023**

Purattasi - 5,
Sobakiruthur Varudam,
Thiruvalluvar Aandu 2054.

**Read:**

1. (Per.) FB TANGEDCO Proceedings No. 9 (SB) dated 02.03.2018.
2. (Per). FB TANGEDCO Proceedings No. 10 (SB) date 02.03.2018.
3. Memorandum of Settlement under section 12 (3) of the Industrial Disputes Act, 1947, Proceedings No. B2/39840/2023 dated 16.05.2023.
4. (Per.) FB TANGEDCO Proceedings No. 13 (SB) dated 24.05.2023.
5. (Per.) FB TANGEDCO Proceedings No. 14 (SB) dated 24.05.2023.
6. (Per.) CMD TANGEDCO Proceedings No. 100 (SB) dated 16.06.2023.

**PROCEEDINGS:**

In the Boards Proceedings first and second read above, orders were issued for revision of pay to the Workmen and Officers of the TANGEDCO with effect from 01.12.2015 and the existing rate of House Rent Allowance, City Compensatory Allowance, Special Pays and other Allowances were ordered to be doubled with effect from 01.10.2017.

2. In the Boards Proceedings fourth and fifth read above, orders were issued revising the pay of the workmen and officers of the TANGEDCO with effect from 01.12.2019 and the existing rate of House Rent Allowances, City Compensatory Allowances, Special Pays and other Allowances as on 01.10.2017 were ordered to be continued until furtherr orders.

3. During the settlement made between the TANGEDCO and the Trade Unions, it has been agreed to form a Committee to examine to revise other allowances which relates to TANGEDCO employees (i.e. Cycle Allowance, Night Shift Allowance, Store Keeper Allowance, Assessment Allowance, Hill Allowance, Winter Allowance, Conveyance Allowance, Remote Hydro, Cavern Allowance, Thermal Allowance and Hot-Line Allowance, etc.,) and to finalize the same.

4. Accordingly, in the Proceedings 6th read above, a Committee has been constituted with the following Members:-

1. The Director (Generation)/TANGEDCO - Chairman of the Committee
2. The Chief Engineer/Personnel - Convener of the Committee
3. Director (Finance)/TANGEDCO - Member
4. Chief Engineer/Mechanical Thermal Stations & Gas Turbins Stations - Member
5. Chief Engineer/Hydre - Member

The above said Committee members are also directed to examine the allowances mentioned in para-3 above and to submit its recommendation within a period of two months.

5. The above said Committee has suggested to include the Joint Managing Director/Finance, as a Chairman of the Committee. Accordingly, the Committee constituted in the reference 6th cited is hereby reconstituted by including the Joint Managing Director/Finance, as a Chairman of the Committee as follows:-

| | |
|---|---|
| 1. The Joint Managing Director/Finance | Chairman of the Committee |
| 2. The Director (Generation)TANGEDCO | Member |
| 3. The Chief Engineer/Personnel | Convener of the Committee |
| 4. Director (Finance)/TANGEDCO | Member |
| 5. Chief Engineer/Mechanical Thermal Stations & Gas Turbine Stations | Member |
| 6. Chief Engineer/Hydro | Member |

**(By order of the Chairman-cum-Managing Director)**

**R. Devaraj**
Secretary



## சென்னை GCC - புதிய நிர்வாகிகள்

| | |
|---|---|
| *PRESIDENT :* | **A. RADHAKRISHNAN**<br>Acct. Supervisor,<br>O/o. The SE/GCC-I/Chennai |
| *SECRETARY :* | **S. UDAYA**<br>Foreman - I<br>O/o. The AE/PTM/Ambathur |
| *TREASURER :* | **V. NAGARAJAN**<br>Foreman - I<br>O/o. The AE/SSE/SPR |
| *WORKING PRESIDENT :* | **V. PANDURANGAN**<br>Foreman - II<br>O/o. The AE/TLC/GCCI/Chennai |
| *ORGANIZING SECRETARY :* | **S. KOTHANDAN**<br>Acct. Supervisor,<br>O/o. The SE/GCCI/Chennai |
| *WOMEN'S WING SECRETARY :* | **S. SIVAGAMI**<br>Asst. Acct. Officer<br>O/o. The SE/GCCI/Chennai |
| *VICE PRESIDENT :* | **S.E. RAVI**<br>Foreman - II<br>O/o. The AE/SEE/GCCII/Chennai |
| *VICE PRESIDENT :* | **V. MURUGAN**<br>Foreman - II<br>O/o. The AE/SSE/Koyambedu |
| *VICE PRESIDENT :* | **S. JAZIR HUSSAIN**<br>Adm. Assistant<br>O/o. The SE/GCC-I/Chennai |
| *JOINT SECRETARY :* | **M. KUMAR**<br>Foreman - II<br>O/o. The AE/TLC/M.M Nagar |
| *JOINT SECRETARY :* | **R. SATHISH KUMAR**<br>Field Assistant<br>O/o. The AE/TRB/ Ambathur |

# B.P. No. 2 - மின்வாரிய கருத்துரையை ஏற்காமல் எரிசக்தி துறை வெளியிட்ட உத்தரவு

**Energy (B2) Department,**
Secretariat,
Chennai - 600 009.

**Read:**

**Letter (D) No. 26, Dated : 11.07.2023**

From
**Dr. Beela Rajesh,** I.A.S.,
Principal Secretary to Governement

To
**The Additional Chief Secretary / Chairman and Managing Director,**
Tamil Nadu Generation & Distribution Corporation Limited
Chennai - 600 002.

Sir,

Sub : Energy Department - Establishment - TANGEDCO - State Public Sector Undertaking / Statutory Boards - Guidelines issued in G.O (Ms.) No. 27, Finance (BPE) Department, Dated 21.01.2002 - Adopted - Modification proposal submitted to Board - Regarding.

Ref : Your Letter No. 38380/A18/A182/2022-2, Dated 20.10.2022.

I am to invite your attention to the reference cited. The Government after careful consideration of the directions of the Hon'ble High Court of Madras in its oder dated 17.11.2022 in W.P.No. 11271 of 2022, have decided to reject the request of Chairman and Managing Director, Tamil Nadu Generation & Distribution Corporation Limited for granting exemption from the orders issued in G.O. (Ms) No. 27, Finance (BPE) Department. Dated 21.01.2002 on the following grounds as it would set a bad precedent and could encourage similar requests from other PSUS/Stuaturory Boards and order accordingly:-

(i) In G.O (Ms) No. 27, Fin (BPE) Department, Dated 21.01.2002, certain guidelines were issued to all SPSUs.Statutory Boards, including essential service organizations like CMWSSB, TWAD, STUs, erstwhile TNEB (now TANGEDCO/TANTRANSCO)] to observe cost-saving measures, particularly for loss making SPSUs. These instructions were subsequently reiterated in Government Letter No. 3157/Fin (BPE/22 dated 26.1.2022. However, Tamil Nadu Generation & Distribution Corporation Limited had adopted the above G.O. on 19.3.2022, after a lapse of 20 years, and accordingly, B.P. No. 2 was issued by TANGEDCO on 12.4.2022.

(ii) In Government Letter No. 23283/Fin(BPE)/22. Dated 15.10.2022, the Government conveyed "No objection" to relaxing item Nos. 9&10 (sanctioning of HBA, Conveyance Advance, Education Advance, Computer Advance etc.) and item No. 10 (interest not less than the marginal cost of borrowed capital or average cost of borrowed capital whichever is higher while sanctioning of staff advances) in G.O.Ms. No. 27. In (BPE) Department, dated 21.02.2022. in favour of TANGEDCO employees. However, the employees of TANGEDCO have requested

the cancellation of the B.P dated 12.4.2022 issued by Chairman and Managing Director. Tamil Nadu Generation & Distribution Corporation Limited in this regard, the Board of Directors of Tamil Nadu Generation & Distribution Corporation Limited resolved on 28.9.2022 to forward necesary proposal to Government.

(iii) As per G.O (Ms) No. 297, Fin (BPE) Department, Dated 27.6.2000, the CEOS of all SPSUs/Statutory Boards were requested to examine proposals relating to the extension of welfare schemes applicable to Govt. employees in detail during the Board meetings, taking into account the financial commitment and sustainability of the organization.

(iv) In Government Letter No. 42803/Fin(BPE)/2008, Dated 13.08.20228 & Government Letter No. 5938/Fin(NPE)/2022. Dated 24.2.2022, specific directions have already been issued to obtain prior approval from the Govt. when sanctioning enhanced DA to employees, pensioners/ family pensioners on par with Government employees especially when the organization is inclurring cash loss. Therefore, it is the responsibility of Tamil Nadu Government & Distribution Corporation Limited to include the above Government letters in the wage settlement agreement itself before signing.

(v) In Government Letter No. 38307/Fin(BPE)/2022. Dated 18.8.2022, it has been explicitly indicated that the employees of Government companies are not civil servants and therefore, not entitled for the protection afforded by Article 311 of the Constitution of India. Corporate bodies are independent entities, and their employees cannot claim parity with Government Employees. The State Government has the right to deny similar benefits to employees of financially unviable corporate bodies or those whose activities have resulted in financial losses.

2. This letter is issued based on the concurrence of the Finance Department vide its U.O.No. 21014/BPE/2023, Dated 3.7.2023.

Yours faithfully,
**for Principal Secretary to Government**

## இரட்டை கோபுர செங்கொடி

சிகரம் ஏறி சிறகடிக்குது
இரட்டை கோபுர செங்கொடி
மின்வாரிய பணியாளர்கள்
வாழ்வில் வருமே பேரொளி
ஒன்பது கோள்கள் வலம் வருதே
எல்லைகள் காணா வானிலே
வலம்வந்தே கொடிகள் ஏற்றினோம்
கோவை மண்டல வடக்கிலே
சிந்தனை செய்தோம்
சிறகை விரித்தோம்
கம்பங்கள் செய்தோம்
தோளில் சுமந்தோம்
கரங்களை இணைத்தோம் வர்ணத்தை தெளித்தோம்
விழ வைக்க பறித்த குழியில்
கம்பங்கள் நட்டு வீறுகொண்டெழுந்தோம்
வட்டம் கோட்டம் உபகோட்டம்
தோழர்கள் உழைப்பே கம்பத்தில் கயிறேற்றம்
அழைப்பிதழ் தந்து வரவேற்றோம்
அனைவரும் வாழ்த்த கார்கள் தேரோட்டம்
தலைமையிலிருந்து வந்தனரே
தலை நிமிர்ந்து நின்றனரே
தென் வடக்கு மையமே
இணைந்தே நாங்கள் வென்றோமே
சிகரம் ஏறி சிறகடிக்குது
இரட்டை கோபுர செங்கொடி.

தோழமையுடன்
**ஆர். சிவப்பிரகாஷ் BE.**
பொருளாளர்,
கோவை வடக்கு கிளை

**பகுதி நேரப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு**
**நமது முறையீட்டிற்கு பிறகு வாரியம் வழங்கிய உத்தரவு**

Adm. Branch,
144, Anna Salai,
Chennai - 600 002

**Memo. (Per.) No. 51578/G.18/G.182/2023 dated : 05.09.2023.**

Sub : TANGEDCO - Part Time Conservancy Workers - Fixation of pay in the Revision of Wages w.e.f. 01.12.2019 and payment of Arrears - Orders issued - Reg.

Ref : 1. (Per) FB TANGEDCO Proceedings No. 13 (SB) dt. 24.05.2023
2. Note approved by the CMD/TANGEDCO on 08/2023.

All the Chirf Engineers/Superintending Engineers/Pay Drawing Officers are hereby informed that the revision of wages w.e.f. 01.12.2019 as ordered in (Per) FB TANGEDCO Proceedings cited under reference 1st above (6% benefits i.e. not exceeding two cells and 3% service weightage increment and a consolidated lump sum amount of Rs. 500/- per month from 01.12.2019 to 31.03.2022 i.e., for 28 months) is extended to the Part Time Conservance Workers those who were in service in TANGEDCO in the time scale of pay (4100-12500) as on 01.12.2019. The existing Pay matrix of Part Time Conservancy Workers shall be continued, as per the Annexure-1 of this Memo.

2. As per the proceedings, no benefits/advantages other than those already granted to the Part Time Conservancy Workers will be given and the extension of the (Per) FB TANGEDCO Proceedings No. 13 (SB) dt. 24.05.2023 is to the effect for revision of wages and payment of arrears in 2 installments alone.

Encl: Annexure-I

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**K. MOZHIARASI**
Chief Engineer/Personnel